89


# ஜகன்மோகினி.

ஆசிரியை
வை.மு. கோதைநாயகி அம்மாள்

OFFICE OF THE ... 3 APR 1937



புதிய நாவல்




வெளியாகிவிட்டது

JL
211,N22 JM
N37.14.2
182999

பிப்ரவரி 1937

சாந்தகுமாரி

அணு 2

தமிழ் நாட்டு பால்ய நடிகர்களின்

## இணையிலா வெற்றி!

# பாலயோகினி

தென்னிந்திய வாழ்க்கையைச் சித்தரிக்கும்

உன்னத சமூகப் படம்

தற்சமயம்

காரைக்குடி:—நடராஜா டாக்கீஸ்
மதுரை:—ஸிடி ஸினிமா
திருவாரூர்:—ரியால்டோ டாக்கீஸிலும்

திரளான ஜனங்களுக்குக் காட்டப்பட்டு வருகிறது.

பிப்ரவரிமீ 5ந்தேதி முதல்

**சென்னை பாரகான் டாக்கீஸில்**

வெளிவரும்.

ஸ்ரீமான் K. சுப்ரமண்யம் B. A., B. L.,

டைரேக்ட் செய்தது.

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பரேஷன்

7-பெல்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை.

டெலிபோன் 8487 தந்தி : நவீன.

ஶ்ரீ:

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மேய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் | தாது ௵ தை ௴ | இதழ் |
|---|---|---|
| 14 | February, 1937. | 2 |


## திருமால் துதி.

மண்ணாய்ப் பிறந்தாலும் மாதவனின்னடியார்
மிதித்திடும் மாண்பெய்துமே!
வளமைதரு பயிர்களும் கனியுதவு தருக்களும்
மலர்ச்செடியும் வளர்ந்தோங்குமே!

வண்ணானின்போதி சுமக்கும் வாலேயமாயினும்
மக்களுக்குதவியாமே!
வாஞ்சையுடன் காவல்செயும் ஞமலியாய்ப்பிறப்பினும்
வளர்த்திடும் மேன்மை பெறுமே!

தண்ணீர் பெருக்காகித் தங்காது ஓடிடில்
சகலர்க்குமுதவியாமே!
சாலையோரந்தனில் கல்லாயிருந்திடில்
சலித்தோரை இளைப்பாற்றுமே!

எண்ணாத நன்மையில் எள்ளளவும் பயனில்லா
ஈனமாம் ஜென்மமுற்றேன்
கண்ணா! நீ இனியேனும் கருணைபுரிந்தேழையேன்
கவலையைப் போக்குவாயே!

—வை. மு. கோ.


3 APR 1957
182994.
சென்னை-600 0..

# உலகக் கொந்தளிப்பிற்கு விமோசனம் உண்டா?

ஸ்ரீமான் M. C. ஸ்ரீநிவாஸன், M. A., B. L.,
அட்வொகேட்.

தற்சமயம் தேசிய மகாசபைக்குத் தலைவராக விளங்கும் பண்டித ஜவஹர்லால் நேரு பல வருடங்கள் சிறைவாசம் செய்து வெளிவந்ததும் மகாத்மா காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக போற்றப்பட்டு வருகிறார். லோகமான்யரும் மகாத்மாவும் பல உபதேசங்களைச் செய்தார்கள். திலகர் பல வருடங்களாக மறைந்திருந்த சுதந்திர இச்சையை இந்தியா பூராவும் பரவச் செய்தார். மகாத்மா காந்தி சாத்வீகமாகப்போராடும் வண்ணம் 'சத்யாக்ரஹம்' என்ற மந்திரத்தை உபதேசித்தார். அம்மாதிரியே ஜவஹர்லாலும் ஒரு புதிய உபதேசம் செய்கிறார். அது என்னவெனில், உலகமெல்லாம், ஒன்றாக கட்டப்பட்டிருக்கிறதென்றும், எங்கும் வறுமையிருப்பதின் காரணம் பலரை இம்சித்து சிலரே உலகத்தின் ஐஸ்வர்யங்களைச் சுரண்டி அனுபவிப்பதினால்தானென்றும் நாமனைவரும் வெளி தேசங்களின் சரித்திரங்களைப் பின் பற்றி நடப்பது அவசியமென்பதும் தான். நேருவின் கொள்கைகளை அப்படியே சரியென்று சொல்வதோ, அவருடைய அபிப்பிராயங்களை ஆமோதித்துத் தான் ஆகவேணுமென்றும் சொல்லாவிடினும், அவர் சொல்வதில் தோன்றும் உண்மைகளை எவரும் எதிர்க்க முடியாது.

தினசரிப் பத்திரிகைகளை இடைவிடாமல் படிப்பவர்களுக்குத் தற்சமயம் ஐரோப்பாவிலுள்ள சில நாடுகளிலும், சைனா, ஜப்பான் முதலிய கீழ்த் தேசங்களிலும் ஒரே குழப்பம் ஏற்பட்டிருப்பது தெரிந்திருக்கலாம். நம் நாட்டில் தற்சமயம் மடாதிபதிகள் சட்டம் செய்தால் எவ்வளவு மரியாதையுடன் பின்பற்றுகிறோமோ அப்படித் தான் ஸர்வதேச சங்கத்தின் விதிகளை ஐரோப்பிய அரசாங்கங்கள் கவுரவிக்கின்றன. இவ்விஷயங்களைப்பற்றிப் பேசும்பொழுது ராஜாங்கங்கள் வேறு, ஜனங்கள் வேறுஎன்றுதான் சொல்ல வேண்டும். ராஜாங்கத்தார் செய்யும் வேலைகளை ஜனங்கள் அனேக இடங்களில் ஆமோதிப்பதில்லை. அதிகாரம் வகிக்கும் சில புத்திசாலிகள் ஒன்று சேர்ந்து, சேனை, சமுத்திரப்படை, ஆகாயப்படை, விஷமருந்து இவைகளின் உதவியால் ஆண்டு வருகிறார்கள். ஆனால், நம் இந்திய தேசத்தில் காணப்படும் அதிசயம் வேறு எங்கும் காணமுடியாது. நம்மில் பலர் 'இந்தியாவை இந்தியர்களால் ஆளமுடியாது, அன்னியர்தான் ஆள வேணுமென்றும், அவர்களுடன் நாம் ஒத்து ராஜாங்கத்தை நடத்துவதே பயமற்றது; பிரிந்தால் வந்தது தீங்கு' என்றும் சொல்லுகிறோமல்லவா; அம்மாதிரி ஐரோப்பாவில் ஒரு குழந்தைகூடச் சொல்லாது. ஆதலால் அவர்கள் அன்னியர் தங்களை எதிர்க்காமல் பார்த்துக் கொள்ள முன்வந்துள்ள அரசாங்கத்தை ஆதரித்து வருகிறார்கள், அதன்பொருட்டு சில சமயங்களில் அரசாங்கம் செய்யும் அக்ரமங்களையும் பொறுத்துக் கொள்ளுகிறார்கள்.

பல மாதங்களாகப் பத்திரிகைகளில் ஐரோப்பாவில் யுத்தபேரிகை அடிக்கிறது என்று வெளியாகிக் கொண்டேயிருக்கின்றது. நாமும் இந்தியாவில் சண்டை வரும், சண்டை வரும் என்று வாயைத் திறந்து கொண்டிருக்கிறோம். அதில் ஏதோ வேடிக்கை யென்று நினைக்கிறோம். குண்டேர் பக்கங்களில் ஒரு ராத்திரி புயல் காற்று அடித்து அதனால் ஜனங்களுக்குண்டான கஷ்டம் இன்னும் நீங்கவில்லை. பிரதி தினமும் குண்டுமாரிகள் ஆகாயத்திலிருந்து விழுந்து கொண்டிருந்தால், லக்ஷக்கணக்கில் உயிர்ச்சேதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். கோடிக் கணக்கில் பணம் சாம்பலாகிவிடும். ஸ்பெயினில் தற்சமயம் அரசாங்கத்தாருக்கும், பிற்போக்கானவர்கள் ஒன்று சேர்ந்துள்ள கட்சிக்கும் நடக்கும் யுத்தத்தில் மகன் தகப்பனைக் கொல்கிறான். சிறுகுழந்தைகளுடன் பலதாய்மார்கள் உண்ண உணவும் தங்க நிழலுமின்றித் தெருக்களில் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் காதுகளில் குண்டு வெடிகள் தான் கேட்கின்றன. கண்களுக்கு முன்பு புகைதான் பரவிச் செல்கின்றது. இந்த யுத்தத்திற்கு ரகஸ்யமாக ஜெர்மனியும் இத்தாலியும் ஸ்பெயின் அரசாங்கத்திற்கு விரோதமாக வேலை செய்வதாகப் பத்திரிகைகளில் வெளிவருகின்றது. முஸோலினியும், ஹிட்லரும் தாங்கள் ஒன்றிலும் பிரவேசிக்கவில்லை யென்று சொல்லுகிறார்கள். எது உண்மை யென்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

18, 19-வது நூற்றாண்டுகளிலும் 20-வது நூற்றாண்டின் முதலிலும் உலகத்தை மிரட்டி வந்த பிரிட்டிஷ் அரசாங்கம் ஒன்றையும் கவனிக்க முடியவில்லை. தாங்கள் ஏற்கனவே தேடிவைத்த சொத்துக்களைக் காப்பாற்றுவதே கஷ்டமாகவிருக்கிறதுபோலும். ஐரோப்பாவில் எது நடந்தாலும் பிரிட்டிஷ் பத்திரிகைக்காரர்கள், அதில் நாங்கள் நடு நிலைமை வகிப்பது தான் சரி என்று சொல்லி மழுப்பிவிடுகிறார்கள்.

இனி உண்மையான நாகரிகம் விருத்தியடைந்து உலகத்தில் எங்கும் க்ஷேமம் நிறைந்திருக்கவேண்டுமாயின், மூன்று விஷயங்கள் அவசியம். (1) "வேறு ஒரு நாட்டை நாசப்படுத்தி எந்த தேசமும் இன்று செழித்து வாழ முடியாது; அடிப்படையான இந்த உண்மையை நாம் மனத்திலிருத்திக் கொண்டால், இப்பொழுது மனித சமூகத்தை எதிர் நோக்கியுள்ள கஷ்டமான பல பிரச்னைகளுக்கு வழி யேற்படும்" என்று ஸ்ரீ. ஈடன் கூறுவது போல, ஒரு தேசம் மற்றொரு தேசத்தை ஆளவேணுமென்ற ஆசையை விட்டுவிடவேணும். 2. புத்தி, குணம், இவைகளால் மனிதனுக்கு கவுரவம் கொடுக்கவேண்டுமேயொழிய ஒருவனிடம் மாத்திரம் திரவியம் கொடுத்து அவனை மேன்மைப்படுத்துவது கூடாது. அதாவது உலகத்தில் வறுமை யென்பதை மூலை முடுக்கிலிருந்தும் கூடத் துரத்திவிட வேண்டும். எங்கும் சமத்வ அறிவை யுண்டாக்கும்படி ராஜாங்கங்களும் பொதுஜன ஊழியர்களும் செய்யவேண்டும். அறிவின்மையால்தான் சகல துன்பங்களும் உண்டாகின்றன. சமத்வ அறிவிருப்பின் மனிதனை மனிதன் பரிகசிக்கமாட்டான்; ஹிம்சிக்கமாட்டான்; ஸ்திரீ, புருஷனை வெறுக்கமாட்டாள்; புருஷன், ஸ்திரீயை சிறுமைப் படுத்தமாட்டான். ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆளாது; ஒரு நாடு மற்றொரு நாட்டை எதிர்க்காது. இதற்குக் கடவுளின் உதவியும், வீரர்களின் முயற்சியுமே அவசியம்.

# உதிர்ந்த மணிகள்

## சுதந்தரமடைய வழி

நம்முள் சச்சரவு செய்து, அந்நியரது நிலைமையை நாம் ஏன் பல மூள்ளதாக்க உதவ வேண்டும் ? நாம் சுதந்தரம் அடைவதற்காக நமது வேற்றுமைகளை ஒழித்து ஒன்று படுவோமாக. —சர்தார் படேல்

## பிரிட்டிஷார் இயல்பு

கஷ்டமான பிரச்னை ஏற்படும் பக்ஷத்தில் பிரிட்டிஷார் மற்றவர்களைப்போல் உடனே அதைத் தீர்த்துவிடப் பார்ப்பதில்லை ; எப்படியாவது தற்காலிகமாக மழுப்பிவிட்டுப் பின் சந்ததி எப்படியாகிலும் அதைச் சமாளித்துக் கொள்ளட்டும் என விட்டுவிடுவதே பிரிட்டிஷாரின் இயல்பு. —கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்.

## தாய்ப் பாஷையின் அவசியம்

ஒருவர் என்னதான் முயன்றாலும் தாய் பாஷையில் அடையக் கூடிய விற்பத்தியின் அளவுக்கு அந்நிய பாஷையில் விற்பத்தியடைய முடியாது. —ஸர். சாப்ரு

## ஒற்றுமையின் உயர்வு

ஒற்றுமைப்படும் விஷயத்தில் ஜாதி மத வித்யாசங்களைப் பாராட்டாது அவர்கள் நடந்து கொண்டதால், ஜப்பானியர் தற்காலம் ஐரோப்பிய வல்லரசுகளுக்குச் சமமாக விளங்கி வருகிறார்கள்.

—ஸர். எம். வேங்கடசுப்பராவ்

## உண்மைப் பேச்சு.

வார்த்தையைக்கூறி எண்ணத்தை மறைக்கும் ஒரு ராஜதந்திரியின் வார்த்தையைப்போல், என்வார்த்தையை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

—மகாத்மா காந்தி

## புரட்சி ஒழிய

அராஜகமும் சமூகக் குழப்பமும் ஏற்படாமலிருக்க, அறியாமையைப் போக்கவேண்டும். —கே. டி. ஷா

## வீரன் யார் ?

உலகப் பற்றுக்களின் மத்தியில் வாழ்ந்து பரிபூர்ண மடைகிறவன் தான் உண்மையான சுத்த வீரன்.

—ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்

## துரோகம் வேண்டாம்

தாய்நாட்டின் கௌரவத்திற்கும் நலன்களுக்கும் பாதகமாக வாக்காளர் லஞ்சம் வாங்கினால் மகா பாபமென்று எச்சரிக்கை செய்கிறேன். —ஸி. ராஜகோபாலாசாரியார்

## அன்பின் செயல்

இன்று நாம் கூறும் அன்பான மொழிகள், நாளை முளைத்து தழைத்து, பூத்துக் காய்த்துப் பழுக்கும். —திரு. ராகவாசாரியார்

# மெரினு பேச்சு

"வழிப் போக்கன்"

## நான் விரும்புவது

பாய் பாமானந்தர் ஹிந்து ராஜ்யம் வேண்டுமென்கிறர். நான் இந்திய மக்களுக்கான ஜனநாயக பொறுப்பாட்சி ஏற்படவேண்டு மென்கிறேன். —ஜனுப் ஜின்னு.

இந்திய மக்கள் முஸ்லீம்கள் மாத்திரந்தானு? எல்லோருமானுல், காங்கிரஸில் சேர்ந்து போராடலா மல்லவா?

## நம் உரிமை

தங்களை ஆண்டு கொள்ள லாயக்குள்ளவர்களென்பதை நம்முடைய ஸ்திரீகள், யுவர்கள், ஆடவர் முதலியோரைவிட மேலாக வேறு எந்த ஜனமும் நிரூபித்துக் காட்டவில்லை. —டி. பிரகாசம்

வேறு ஜனம் என்ருல் யார்? நம்முடைய தகுதியுடைமை பிறர் நிரூபித்துக் காட்டுவதெப்படியோ தெரியவில்லை.

## ஓட்டர்கள் கவனிக்கவும்

ஜனங்களின் நன்மைக்காக மகாத்மா காந்தியின் ஆணையின்பேரில் காங்கிரஸ் போட்டி போடுகிறது. காங்கிரஸை எதிர்ப்பது நியாயமல்ல. —கோயிலூர் மடம் ஸ்வாமிகள்

இதை அனுஷ்டானத்தில் கொண்டு வருபவர் உண்டா? சேலம் ஸ்ரீ. எஸ். அமிருதலிங்கம் செட்டியார் போல், மற்றையோரும் நடந்து கொண்டால், பணம் வீண் விரயமாகாமலிருப்பதெப்படி?

## நூதன போக்கு

வேற்றுமைக்காக நான் காங்கிரஸை விட்டு ஒருபோதும் வெளியே போனதில்லை. —பண்டித மாளவ்யா.

காங்கிரஸ் அபேக்ஷகரான லாலா லஜபதிராய் குமாரிக்கு எதிராக, சன்னு தேவியை மாளவ்யாஜி ஆதரிக்கத் தடையென்ன?

## சமாதானத்திற்கு எது அவசியம்?

"வெண்ணெயை விட பீரங்கிகளே மேல்" என்கிறர் ஜர்மன் ஜெனரல் கோயரிங். "பீரங்கிகளைவிட வெண்ணெயே சிறந்தது" என்கிறர் பிரிட்டிஷ் மந்திரி ஈடன். —பத்திரிகைச் செய்தி

அநுஷ்டானத்தில் விளக்கெண்ணெய்க் கொள்கையே சிறந்ததாயிருக்கிறதுபோலும்.

## பிறர் பின்பற்றுவார்களா?

சேத் ஜம்னுலால் பஜாஜ், ஜாமிய மீலிய நேஷனல் முஸ்லீம் யூனிவர்ஸிடிக்கு ரூ. 16,000 நன்கொடை அளித்துள்ளார் —பத்திரிகைச் செய்தி

முஸ்லீம் நண்பர்களும் வித்யாசமின்றி இத்தகைய நன்கொடைகளை அளிக்க முன்வருவார்களா?

# தினம் பிரார்த்தனை அவசியமா?

## மகாத்மாவின் உபதேசம்

"திருவாங்கூரில் இம்மாதிரி பிரார்த்தனைகள் நான் நடத்தும் பொழுது ஆயிரக் கணக்கான ஜனங்கள் அதில் கலந்துகொண்டனர். ஆனால், இங்கு காண்பதைவிட அங்கு நிசப்தம் குடிகொண்டிருக்கும். அதற்குக் காரணமென்னவெனில், திருவாங்கூர் பூமியில் நான் கால் வைத்ததிலிருந்து நான் க்ஷேத்திர யாத்திரை செய்வதாக எப்படிக் கருதிக் கொண்டேனோ அதே மனோபாவத்துடன் திருவாங்கூர் மக்கள் பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

இந்தப் புது உணர்ச்சி திருவாங்கூர் அரசரின் பிரகடனத்தினால் ஏற்பட்டது என்றுதான் நான் நினைக்கிறேன். நமது மதம் புத்துயிர் பெறுவதற்கு இப்பிரகடனமும் உதவியா யிருக்கிறது. இந்தப் பிரகடனம் ஜாதி ஹிந்துக்களும், ஹரிஜனங்களும் செய்ய வேண்டிய பிராயச்சித்தத்தின் சின்னம் என்று திருவாங்கூர் மக்கள் கருதியதுபோல் நீங்களும் அந்த பிராயச்சித்த மனப்பான்மை கொண்டவர்களானால் பிரார்த்தனையில் நிசப்தமாயிருந்திருப்பீர்கள்.

ஹிந்துமதம் உலகத்திலுள்ள பெரிய மதங்களில் ஒன்றாக இருக்க வேண்டுமானால், திருவாங்கூரில் பரவியிருக்கும் புத்துணர்ச்சி பாரத நாடெங்கும் பரவவேண்டும். நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்விலேயே இந்த உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும்.

## பிரார்த்தனை முறை

நாங்கள் வழக்கமாக கீதை 2-வது சர்க்கத்தில் 19 சுலோகங்களைச் சொல்லி வருகிறோம். அந்த ச்லோகங்களின் பொருளை ஒருவன் அறிவானாயின், ஒரு ஹிந்து எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவன் உணர்வான். எல்லோரும் சம்ஸ்கிருதத்தை அறியமுடியாதாகையால், நமது முன்னோர்கள் பஜனை கீர்த்தனங்களைச் செய்தார்கள். லக்ஷக் கணக்கான மக்கள் பஜனை செய்யக்கூட அசக்தர்களா யிருப்பதால், பகவானை எந்த ரூபத்தில் நம் மனக் கண்முன் உருவகப் படுத்துகிறோமோ அந்த நாமத்தைச் சொல்லி, அவரைப் பஜிக்கத்தான் நம் பெரியோர்கள் நாமாவளிகளை உண்டாக்கி யிருக்கின்றனர். ஆகையால், ராமன், கிருஷ்ணன் என்கிற ஸஹஸ்ர நாமங்களில் ஒன்றைச் சொன்னால் போதும். நாங்கள் வழக்கமாகச் சொல்லும் 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்னும் பதங்களைச் சொல்லாததற்குக் காரணம் இன்று கோகுலம் சிறுவர்கள் தங்கள் சுந்தரமான குரலில் ராமநாம பஜனை செய்தனர். நீங்கள் துளசிதாஸ் ராமாயணத்திலிருந்து சில கீர்த்தனைகள் உங்கள் முன் பக்க வாத்தியத்துடன் பாடினதைக் கேட்டீர்கள். இந்தக் கீர்த்தனங்கள் சில காலமாகத்தான் பாடிவருகிறோம். கிராமப்புனருத்தாரண வேலை ஆரம்பித்ததிலிருந்து கிராமவாஸிகளுக்கு இம்மாதிரி கீர்த்தனங்கள் சொல்ல வேண்டி யிருக்கிறது. துளசிதாஸ் ராமாயணத்தை விந்திய பர்வதத்திற்கு வடக்கே லக்ஷக்கணக்கான மக்கள் அறிவார்கள். அதன் சங்கீதம் மிக உயர்ந்தது; சாஹித்யமோ அதைவிட மேன்மை வாய்ந்தது. துளஸிதாஸ் ராமாயணத்தைச் சிரத்தையுடன் சொல்வதைக் கேட்டவர்கள் மெய்ம்மறந்து மன வெழுச்சி பெற்றதை நான் பார்த்திருக்கிறேன்.

நீங்கள் எல்லோரும் படுக்கைக்குப் போகுமுன் பகவத் தியானம் செய்யவேண்டும் என்பதற்காக இதை எல்லாம் கூறினேன். தேகத்தைக் காப்பாற்ற உணவு வேண்டுவதுபோல, தேகத்தைத் தவிர ஆத்மா இருக்கிறது என்று நாம் உணர்ந்தால், அந்த ஆத்மாவுக்குப் பிரார்த்தனை ரூபமாக உணவு வேண்டியிருக்கிறது என்பதை உணர்வோம். கொஞ்ச நாளைக்கு பிரார்த்தனை செய்து பார்த்தீர்களானால், உணவில்லாதிருந்தாலும் தேகம் ஆரோக்ய மடையும் என்பதையும், ஆத்மாவுக்குப் பிரார்த்தனையாகிய உணவு இல்லாமல் தூங்க முடியாது என்பதையும் உணர்வீர்கள். இதுவரையில், பிரார்த்தனை செய்யாதவர்கள் பிரார்த்தனை செய்தால் புது மனிதர்களாவீர்கள். கொஞ்ச நாள் கழிந்ததும், பிரார்த்தனை செய்யா விட்டால், உங்களிடம் உங்களுக்கே அருவருப்பேற்பட்டு விடும்.

---

## அடுத்த காங்கிரஸை எங்கு நடத்துவது?
## மகாத்மாவின் யோசனை.

எவ்வளவு சிறிய கிராமமாயினும் பரவாயில்லை. ரயில்வே ஸ்டேஷனுக்கு ஏழு மைல் தூரத்திற்கு மேலாக இருக்கக்கூடாது. காங்கிரஸ் நடக்குமிடம் இனமாகக் கிடைத்து, கிராம வாசிகளின் பூர்ணமான ஒத்துழைப்பு வேண்டும். பெய்ஸ்பூரிலிருந்தது போலில்லாமல் மணற்பாங்கான இடமாயிருத்தல் நலம். ஏராளமாக ஜலமும், கக்கூஸ் வசதிகளுமிருக்க வேண்டும். கிராமப்புனருத்தாரணக் காட்சி கடந்ததைவிட இன்னும் மேன்மையாக இருக்கவேண்டும். டிசம்பர்மாதம் அறுவடை காலமாதலால், வேறு மாதத்திற்கு மாற்றுவது உசிதமானது.

# நாஸ்திகன் யார்?

ஒருவனுக்கு நாஸ்திகன் என்ற பதத்திற்கு சரியான அர்த்தம் விளங்கவில்லை. பல நாட்களாக மண்டையை உடைத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் கால் பந்து விளையாட்டு (Foot ball match) ஒன்றைக் காணச் சென்றிருந்தான். இரண்டு கட்சிகளும் மிகவும் வலுத்தனவாயிருந்தன. ஏராளமான ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதன்பொருட்டு ஆட்டம் ஆரம்பிக்க வெகுநேரம் முன்பே கூடி ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். தானும் அவர்களுடன் உட்கார்ந்தான். அவன் பக்கத்தில் ஒரு மனிதர் தனியாக கலவரமேயில்லாத முகத்துடன் உட்கார்ந்திருந்தார். அவர் யாருடனும் பேசவில்லை. ஆட்டம் ஆரம்பித்தது. கோஷம் ஆரம்பித்தது. முதலில் ஒரு கட்சிக்காரர் கோல் போட்டார்கள். அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் பலமாகக் கரகோஷம் செய்தார்கள். அம்மனிதர் ஒன்றும் செய்யவில்லை. வருத்தமும் தென்படவில்லை. சில நிமிடத்திற்கெல்லாம் எதிர்க்கக்ஷி கோல் போட்டது. அதற்கும் அவர் அசையவில்லை. அச்சமயம் வேடிக்கை பார்க்கச் சென்ற மனிதன் அவரை நோக்கி "ஐயா, உங்கள் கக்ஷி கோல் போட்டது. ஏன் கரகோஷம் செய்யவில்லை?" என்றான். அவர் நிதானமாக "ஐயா! நான் ஒரு கக்ஷியையும் விரும்பவில்லை; ஆதரிக்கவில்லை. எனக்கு எல்லாம் ஒன்று" என பதிலளித்தார். இதுதான் நாஸ்திகம் என்று அறிந்ததாக நினைத்துக்கொண்டான்.

---

# புத்தக விமர்சனம்

## தாமே ஸம்ஸ்க்ருதம் கற்றல் என்னும்

## ஸம்ஸ்க்ருத ஸ்வபோதினி

குருவின் உதவியின்றியே ஸம்ஸ்க்ருதபாஷையில் கொஞ்சம் ஞானத்தையடைய இந்நூல் ஓர் பேருதவியாகும். இது இரண்டு பாகங்களாயுள்ளது. இம்முதற் பாகத்தில் பெயர்ச்சொற்கள் யாவும் மிருகங்கள், பக்ஷிகள், மரங்கள் முதலிய வர்க்க வாரியாக அமர சுலோகங்களோடு நூறு பாடங்களில் படிக்கப்பட்டிருக்கின்றன. இப்பாடங்களுக்கும் இன்னும் சில முக்கிய விஷயங்களுக்கும் புஸ்தகக் கடைசியில் ஓர் அகராதி அட்டவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. பதங்களைப் பிரித்து அர்த்தம் சொல்லும் பொழுது ஒவ்வொரு பதத்தின் பக்கலிலும் எந்த தாது (வினைச்சொல்) வழியாய்ப் பதம் பிறந்தது என்றும், அதன்படி உண்டாகும் ஸமாஸ அர்த்தமும் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒரே பொருளுக்கே பல பதங்கள் வருமிடங்களில் முக்கிய பதங்களை மட்டும் பொறுக்கி எடுத்து சுலோகங்கள் ரூபமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் விஷயத்தைப் பூர்த்தி செய்ய அதிகப் படியான சுலோகங்களும் கொடுக்கப்பட்டு அமர இரண்டு காண்டங்கள் அடங்கப்பெற்றுள்ளது. நாகர லிபி தெரியாதவர்களுக்கும் முதலில் தமிழெழுத்துச்சரிப்போடு எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் வினை, உரிச் சொற்கள், இலக்கணம் வாக்கியங்களோடு புஸ்தகம் முடிக்கப்படும்.

விலை ரூபாய் ஒன்றே. தபாற்செலவு ஐந்தரை

புத்தகம் வேண்டுவோர் :—

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

என்ற விலாஸத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

---

## சீனப் பழமொழி

நூறு யுத்தங்களில் நூறு வெற்றிகளைப் பெற்றாலும் அது மிகச் சிறந்ததென்று கூறமுடியாது. சண்டை போடாமலேயே எதிரியைப் பணியவைப்பதுதான் மிகச் சிறந்தது.

## ராஸ் கிராம வாசிகளின் தியாகம்

காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும், பார்க்க வருபவர்களுக்கும் எங்களது 600 வீடுகளையும் காலி செய்து கொடுப்பதுடன், எங்களாலான மற்றெல்லா சௌகரியங்களையும் செய்யத் தயாராயிருக்கிறோம். மேலும், சமீபத்தில் கவர்ன்மெண்டாரால் எங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட 300 ஏகர் நிலங்களைக் காங்கிரஸிடம் ஒப்படைத்து விடுகிறோம்.

# வெளி நாட்டுச் செய்திகள்

## ஸ்பேயின்

உள்நாட்டுக் கலவரத்தில் அன்னிய நாட்டிலிருந்து தொண்டர்களை அனுப்பக்கூடாதென்று மற்ற தேசங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றன. வெளி நாடுகளின் தலையீடு விலகினால் கூடிய சீக்கிரத்தில் சமாதான மேற்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

## அமேரிக்கா :: வெள்ளத்தின் வேட்டை

## அக்னியின் அமர்க்களம்

வெள்ளக் கொடுமையினால் இங்கிலாந்தும் வேல்ஸும் சேர்ந்த விஸ்தீரணத்தை விட அதிகமான நிலப் பரப்பு ஒரே வெள்ளக்காடா யிருக்கிறது. $7\frac{1}{2}$லக்ஷம் ஜனங்கள் வீடு வாயிலின்றி தவிக்கின்றனர். சுமார் 35 கோடி டாலர் நஷ்டம். குடி தண்ணீர் ஒரு பக்கெட் ஒரு டாலர் வீதம் விற்கப்படுகிறது. ஸ்டாண்டர்டாயில் கம்பெனி தொழிற்சாலையில் தீபிடித்துக்கொண்டதால் $3\frac{1}{2}$மைல் நீளம் அரை மைல் உயரத்துக்கு ஜ்வாலை மயமாகி விட்டது. வெள்ளத்தில் பெட்ரோல் மிதந்து ஓடுவதால் எங்கும் ஜ்வாலை மயமா யிருக்கிறது.

## ரூஸ்வெல்டின் முழக்கம்

ஒவ்வொரு பிரஜை விஷயத்திலும் தேசம் சிரத்தையும் கவலையும் கொள்ளுமாறு செய்வதென்று தீர்மானித்திருக்கிறோம்......நிறைய வைத்திருப்பவர்களுக்கு இன்னும் அதிகம் கிடைக்கச் செய்திருக்கிறோமா என்பது நம்முடைய முன்னேற்றத்தின் அளவுகோலல்ல. மிகக் குறைவாயுள்ளவர்களுக்குப் போதிய அளவாவது கிடைக்க எற்பாடு செய்திருக்கிறோமா என்பதே முன்னேற்றத்துக்கு எற்ற அளவுகோலாகும். அமெரிக்க மக்கள் விரும்பும் பாதையில், அவர்களை நடத்திக்கொண்டு போவதாக பிரதிக்ஞை எடுத்துக் கொள்கிறேன்.

## ஜப்பான்

ராணுவத்திற்கும் ராஜீயக்கக்ஷிகளுக்கும் தீவிர அபிப்பிராய பேதமிருப்பதால் மிகவும் சிக்கலான நிலைமை எற்பட்டிருக்கிறது. புதிய மந்திரி சபையிலுள்ள யுத்த மந்திரி ராணுவத்தால் அங்கீகரிக்கப்படவேண்டுமென்ற விதியிருக்கிறது. ஆயினும் சக்ரவர்த்தியின் கட்டளைக்குக் கீழ்ப்படிவது சம்பிரதாயமாயிருப்பதால் நிலைமை மோசமாகாமலிருக்கலாம்.

## தென்னாப்பிரிக்கா

ஐரோப்பியர்கள் சுதேசிகளுடனோ, ஆசியா மக்களுடனோ விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கும் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டால் இந்தியாவுக்கும் தென்னாப்பிரிக்காவுக்கும் இடையே இருக்கும் உறவுகள் மிகவும் பாதிக்கப்படும்.

## அபிஸீனியா

ராஸ் டஸ்டாவின் தலைமையில் இடலியுடன் சண்டை பிடித்த துருப்புகள் முறியடிக்கப்பட்டு ஓட்ட மெடுத்து விட்டதாகத் தெரிகிறது.

## உள்நாட்டுச் செய்திகள்

ஜனவரி 25-ம் தேதி ஆரம்பமான டெல்லி அசெம்பிளியில் சுமார் 50 அங்கத்தினர்கள் (மூன்றிலொரு பங்கு)தான் இருந்தார்கள். கூட்டம் 80 நிமிஷங்கள் தான்நடந்தது.

### திருவாங்கூர் மகாராஜா

ஆத்தங்கல்லிற்குச் சென்றபோது ஹரிஜனங்கள் அநுமதிக்கப் படாத கோயில்களுக்குப் போகவில்லை.

### நிஜாம் வெள்ளி விழா

பிப்ரவரி௴ 13-ந் தேதி முதல் 26-ம் தேதி வரையில் கொண்டாடப் படும்.

### ஹிந்து மதத்தின் சாரம்

பகவான் சர்வ வ்யாபி. சர்வேச்வரன். அவனே சிருஷ்டி கர்த்தா; காக்கும் அதிபன். அனைத்தும் அவன் தந்ததே; நமக்கென்று ஒன்றும் சொந்தமில்லை. நமது பரம பிதாவுக்கு நாம் அனைத்தையும் சமர்ப்பித்து விடுகின்றோம். அவர் நமக்குரிய தேவைகளைத் தருகிறார்.

"பிறர் செல்வத்தைத் தீண்டாதே" என்பது மதம் போதிக்கும் மற்றொரு உண்மை. பொதுவுடைமை வேதாந்திக்கும் இந்த உண்மை திருப்தியளிக்க வல்லது.

"பிறருக்கு ஸதா தொண்டு செய்வதே புனித வாழ்வு" என்று போதிக்கின்றன ஸத்ய மதங்கள். என் வாழ்க்கையில் இதுவே எனது நம்பிக்கை. ஒவ்வொரு ஹிந்துவும் இந்த தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும். இதைப்பூராவாக அறிந்தோ அறியாமலோ அவன் ஜீவன்களின் சேவகனாக உழைக்கவேண்டும். ஈசாவாஸ்ய உபநிஷத்தில் முதல் மந்திரம் இதைத் தான் போதிக்கின்றது.

**மகாத்மா காந்தி**

### கொடியின் கீழ் திரளுங்கள்

மனிதனுக்கு மனிதன் அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். ஆனால் நம்முடைய பலம் பூராவையும் ஒரு கொடியின் கீழ் திரட்டினாலொழிய, இந்தியா ஈடுபட்டிருப்பது போன்ற அவ்வளவு பெரிய தேசியப் போராட்டத்தில் வெற்றிபெற முடியாது. தேசிய கௌரவத்தை இழந்த இதே ஸ்திதியில் இன்றும் நாம் இருந்துகொண்டே இருப்பது அசாத்தியம்.

**சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார்**

### மங்களகரமான மஞ்சள் பெட்டியை மறக்காதீர்கள்.

உலகத்தில் எதை மறந்தாலும் தங்களைத் தாங்கள் மறக்க முடியாது. அதுபோலே தங்களுக்குள்ள சர்வ ஸ்வதந்திரத்துடன் கூடிய வாக்கையும் (வோட்டையும்) காங்கிரஸையும் மறக்காமல் காங்கிரஸுக்கே கொடுப்போம் என்ற ப்ரதிக்ஞையுடன் உங்களது வாக்கைக் கொடுங்கள். உங்களது ஒவ்வொரு வாக்கும் ஒவ்வொரு உயர்ந்த மலர். காங்கிரஸின் மஞ்சள் வர்ணப் பெட்டியே பாரத மாதா. உங்களது வாக்காகிய மலரை மஞ்சள் பெட்டியில் போட்டு பாரதமாதாவை அர்ச்சித்து, நாட்டின் விடுதலையைக் கோருங்கள்.

# வனிதா விலாசம்

"சூடாமணி"

## பழயன புகுதல் புதியன கழிதல்.

"பாக்கியம்! வாடியம்மா! உக்காரு. எங்கே ரொம்ப நாளாக உன்னைக் காணவில்லையே. என்ன விசேஷம்?" என்று பாட்டியம்மாள் கேட்டாள். பாக்கியம் நகைத்துக் கொண்டே "நான் ஊரிலில்லே பாட்டீ! இன்னிக்கி காலமே தான் வந்தேன். வந்த உடனே ஒங்களைத்தான் முதலில் பார்க்க வந்தேன். ஏம் பாட்டீ! க்ளப்பு என்றாலே முதலில் நீங்கள் வெறுத்தீர்களே. சென்ற வாரம் க்ளப்பு வருடாந்திரக் கொண்டாட்டத்துப் புகைப் படத்துலே நீங்கள் ஜம்முனு விழுந்திருக்கிறீர்களே? எம்மாட்டுப் பொண்ணு பத்திரிகையைக் கொண்டு காட்டினா. எனக்கு ஆச் சரியமா இருந்துது" என்றாள்.

பாட்டி—ஆச்சரியம் என்னடியம்மா! ஒரு காரியத்தைப் பார்க்காத வரைக்கும் அதன் விவரமே தெரியாமல் அபிப்ராய பேதமாகவே இருக்கிறது. விவரம் தெரிந்த பிறகு ஆசையும் ருசியும் உண்டாகிறது. அந்த க்ளப்பிலே ஏதேதோ ஆட்டப் பந்தயம் வெச்சாடீ. முன்னேயே நான் சொல்லியபடி நம்ப பழய கர்நாடக ஆட்டமும் தவறாது நடக்கிறது. அந்த ஆட்ட மும் பந்தயம் வச்சா...சேந்ததுதான் சேந்தோம். நன்னாதான் ஆடலாம்னு நானே பந்தயத்துக்கு முதலில் வந்தேன். கூட 10 பேர் சேந்தாடீயம்மா! முதலில் சோணால் ஆடினோம். நான் தான் ஜெயித்தேன். பல்லாங்குழியாடினோம். நான்தான் ஜெயித் தேன். தாயகட்டத்திலே மட்டும் நம்ப ராமசேஷன் தாயார் குப்பிப் பாட்டி இருக்கா பாரு, அவ ஜெயிச்சுபுட்டாடீ.

பாக்யம்—என்ன அதிசயம்! குப்பிப் பாட்டியும் சேந்துட் டாளா?

பாட்டி—ஆகா! அப்பவே சேந்துட்டா. அவ ஜெயிச்சா. எங்களுக்கு அன்னிக்கு பரிசு ஒரு வெள்ளிக் கோப்பை எனக்கும் குப்பிக்கும் கொடுத்தாடீ...

பாக்யம்—அப்படியா!...பரவா இல்லே பாட்டீ!...நீங்க சேந்து உடனே பரிசும் அடிச்சுப்புட்டங்களே...இப்படின்னா இருக்கணம். அப்பறம் என்ன நடந்தது?

பாட்டி—நடக்கறது என்னடியம்மா...பந்தாட்டங்கள் தான் இருக்கே. அதுலே ஆடினவாள்ளாம் எத்தனே பெரியவா தெரி யுமா? அத்தனே பேரும் ரொம்ப ஜோரா ஆடினா...பாக்யம்... அதெல்லாம் இருக்கட்டும்...அந்த கிளப்புலே போனப்பறம்

எனக்கு ஒரு ஆச்சிரியம் பாரு சொல்லமுடியாது. முன்னே காலத்திலே நாங்களெல்லாம் சின்னவாளா இருக்கச்சே கட்டிண்ட பொடவைகள் இருக்கு பாரு ஆனை பப்பிளி, ஜோடு பப்பிளி, குதலெ பப்பிளி, ஆட்டுமுழி, பிளியங்கொட்டை, பங்காரு கிண்டி, சிங்கார கிண்டி, ஒத்தை குலுக்கு, ரெட்டை குலுக்கு, ஊசிவாணம், சந்திரகாளா...காயும் பழம், கடலை பட்டாணி... கஸகஸா...கடுகண்டாங்கி...

பாக்கியம்—ஐயோ ! ராமா ! இந்த புடவெ எல்லாம் நான் மட்டும் கட்டிக்கல்லையா என்ன? என் கல்யாணத்துலே பங்காரு கிண்டி தான். கூரெபொடவை...கடலெ பட்டாணியும், ஆனை பப்பளியும் நிச்சய தாம்பூலம், வளையாடல் இதற்கு வாங்கினு. பரந்தாத்துக்கூரெ என்ன தெரியுமா...சப்ஜா தாட்டுபத்திரி. எம்மாட்டுப் பொண்ணுக்கு நான் வாங்கச்சே இதெல்லாம் மறைஞ்சுபோச்சு. கிருஷ்ண மேகவர்ணம், பாதாங்கலர், சந்தன கலர், ரோஸ் கருப்புக்கரை, மத்தியிலே ஒன்னுமே இல்லாத பொடவே தான் பாஷனும்...

பாட்டி—அதாண்டீ சொல்ல வந்தேன். என் பொடவே பேரை சொன்னுக்கூட என் மாட்டுப்பொங்களும், பொண்ணும், பேத்தியும் பரிகாசம் பண்ணி விழுந்து விழுந்து சிரிப்பா ! எங்க பாட்டி எனக்கு ரொம்ப ஆசையா காயும் பழம் பொடவை வாங்கி குடுத்தா. அந்த துண்டு ரொம்ப நாள் வரைக்கும் இருந்தது ; அதைப்பாத்து சிரித்தா...இப்ப இந்த கிளப்புலே போய் பாத்தாக்கா என்ன அதிசயண்டீ...நம்ப காலத்து அத்தனை பொடவையும் சின்ன கார்டு கரை, ஐஸ்க்ரீம் கரை, சரிகை கரை, கரையே இல்லாமல் பலவிதமாக பழமாதிரி புடவை எல்லாம் புதுசா வந்துடுத்து. பெரிய பெரிய பணக்காரிகள்ளாம் உடுத்திண்டிருக்கா...நான் சொல்லி கூட காட்டிப்புட்டேன். நெடுவே கஸகஸா இல்லாத பொடவேயே இல்லெடி...

பாக்யம்—பாட்டீ ! லோகமே அவ்வளவுதான். **பழயன புகுதல்; புதியன கழிதல்.** இன்னொன்னு பாருங்கோ. ரவிக்கை நம்ப காலத்திலே இருந்தாப்பலே இப்ப இல்லேன்னு நாம்ப முன்னே சொன்னோம். அப்ப முழங்கை ரவிக்கெ கொச்சு... கப்பு...மண்ணுங்கட்டி. ஏதேதோ மோசமா இருந்தது. கொஞ்ச நாள் அது துள்ளி மறைஞ்சு பூட்டுது. அப்பறம் எத்தனை கோரங்கள் வேண்டுமோ அத்தனையும் ரவிக்கையிலே வந்தது. கையே இல்லாது ரவிக்கையும் பாத்துப்பிட்டோம். அதைப் பாக்ரப்ப பயமாய் போயுட்டுது...இப்போ பாத்திங்களா ? மத்தியில் கூத்தாடிய கப்பு...குச்சு முதலியன கிளம்பிவிட்டன. காலராம் ஒன்னு; விசிரி ரெவிக்கையாம் அது மொளச்சிருக்கு.

பாட்டி—என்ன நாகரீகண்டியம்மா... அதுதான்னு பாத்தா கை வளையலே பாத்தியாடீ... நம்ப காலத்திலேயே நம்ப பசங்களுக்கு வாங்கிப்போடுவமே பம்பாய் வளே. கட்டெவெரல் பெருமன் பட்டை. மத்தியிலே சரிகை மாதிரி பூப்போட்டது. அந்த வளே இப்ப புதுசா எல்லா பெரிய மனுஷாள் வீட்டு பெண்ணும் மாட்டிண்டிருக்கா. மத்தியிலே இந்த மாதிரி பட்டெ வளையே மறஞ்சி செத்துப் பூட்டுது. ஊசியாட்டமாவும் ஊகுமுள்ளு போலவும் நடுவுலே கூத்தடித்து இப்ப அந்த பழம் வளே ஒத்தொத்தரும் மூணு நாலு அடுக்கிண்டிருக்கா. அது என்ன ஆச்சரியம்மா?

பாக்கியம்—எல்லாம் அப்படி தான் பாட்டீ! பாட்டு விஷயத்திலே பாருங்களேன். ஒரு சுஜனஜீவனு நம்ப காலத்துக்குள்ளேயே எத்தனே தரம் புதுசாச்சுது. எத்தனே தரம் பழசாய்ப் போச்சு. நம்ப காலத்திலே பாடின நாட்டுப் பாட்டும், ராமாயண கும்மியும் இப்போ புதிதாகிவிட்டது. இன்னும் என்னென்ன பழயன புதியதாகுமோ பார்ப்போம்............

## மயிலாப்பூர் லேடீஸ் க்ளப் : கதம்பக் கோண்டாட்டம்

சில வருட காலமாக மயிலைமா நகரில் இந்த சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு வெகு திறமையாக நடந்து வருகிறது. இதில் வருடா வருடம் ஒரு கதம்பக் கோண்டாட்டம் நடத்துவது வழக்கம்போல் சென்ற (24—1—37) ஞாயிற்றுக்கிழமை தினம் ஸ்ரீமான் T. R. வெங்கட்ராம சாஸ்திரிகளின் தலைமையில் ஒரு கதம்பக் கொண்டாட்டம் நடைபெற்றது. அக்கொண்டாட்டத்தை வெகு அழகாயும், ருசிகரமாயும் நடத்திக் காட்டினார்கள். பலவித நடனங்கள், ஆங்கில நாடகம் ஒன்று, தமிழில் ஹாஸ்ய விவாகம் ஒன்று முதலிய அனேக காட்சிகளை உயர்குடும்பத்துச் சிறுமிகள் வெகு திறமையாய், காண்போர் மனத்தைக் கவரத்தக்க விதமாக நடித்துக் காட்டியது குறிப்பிடத்தக்கது. குழந்தைகளும் சிறுமிகளும் தங்களுடைய பள்ளிக்கூடப் பாட்டு, வீட்டுப் படிப்பு முதலிய பல ஜோலிகளுக்கிடையே இத்தனை அருமையாக நடித்துக் காட்டிய அவர்களின் திறமையைக் கொண்டாடாதோர் கிடையாது. இந்தக் களியாட்டத்தில் சாரதா வித்தியாலயத்தின் மாணவிகள் கல்யாண ஹாஸ்யத்தை நிரம்பவும் சாமர்த்தியத்துடனும் பொருத்தமாயும் காண்போரின் வயிறு குலுங்கும்படியாக நகைக்கச் செய்து நடித்த பெருமை வித்யாலயத்திற்கும், வித்யாலய மாணவிகளுக்குமே உரித்தாகும். இக்கொண்டாட்டம் சங்கத்தின் கட்டிட நிதிக்காக நடத்தப்பட்டது.

# டாக்கி விமர்சனம் : : பாலயோகினி

"வத்ஸகுமாரி"

## தமிழ்ப் படத்தில் குழந்தைகளின் ஜெயக்கோடி.

சென்ற ஜனவரி இதழில் இரு சகோதரர்களைப்பற்றி எழுதியது ஞாபகமிருக்கலாம். சில அம்சங்களில் அதை விடச் சிறந்த மற்றொரு தமிழ் படத்தை உடனே பார்த்து ஆநந்தித்து, எழுதும் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி சந்தோஷப்படுகிறேன். தமிழ்ப் படங்களுக்கும் விமோசனம் உண்டாகும் காலம் வந்திருக்கிறதென்று சென்ற விமர்சனத்தில் தெரிவித்தபடி இப்படத்தினால் நல்ல விமோசனமே ஏற்பட்டுவிட்டதென்றே கூறலாம். முக்யமாக குழந்தைகளின் திறமையை விளக்கிக் காட்டும் பொருட்டே இப்படத்தைத் தயார் செய்திருக்கிறார்கள். பாலஸரஸ்வதியின் திறமையை குசேலாவில் கண்டு களித்தவர்களுக்கு இது புதிதல்ல. அதைவிட இதில் நடிப்பில் இன்னும் தேர்ச்சி பெற்றிருக்கிறாள். மேல் நாட்டு ஷர்லீ டேம்பிலின் படங்களை நான் பார்த்தபோது என்னால் அடங்காத ஆச்சரியப் பட்டேன். இன்று பாலயோகினியில் பச்சைக் குழந்தை, மழலை மாறாத குழந்தை சரோஜாவின் நடிப்பிற்கு முன் ஷர்லீடெம்பிலின் நடிப்பு வியப்பே கொடுக்கவில்லை. சரோஜாவின் அமுதம் போன்ற மொழிகளால்......" மூணுதம்பிடி வச்சிருக்கேன். ஒன்னு எனக்கு. ஒன்னு கமலாக்கு. ஒரு தம்பிடிக்கு கலர் வாங்கி குடிச்சுப் புடலாம்." என்ற வார்த்தைகள் காதில் இன்னும் சப்தித்து, மனத்தில் ஆநந்தத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன. சரோஜாவின் ஒவ்வொரு தோற்றமும் ஒவ்வொரு நடிப்பும், ஒவ்வொரு வார்த்தையும் ஒரு தனித்த புதுமலரின் மணத்தையே கொடுக்கிறது. இக் குழந்தையின், மற்ற குழந்தைகளின் திறமையான நடிப்பிற்கும், பூர்ண வெற்றிக்கும் மூல கர்த்தா இதை டைரெக்டு செய்த ஸ்ரீமான் K. சுப்பரமண்யம் என்று கூறுவது மிகையே ஆகாது.

சில பாகங்களில் குழந்தை சரோஜாவின் பேச்சும் நடிப்பும் அதிகப்பட்டிருப்பதாக சிலர் நினைக்கலாம். ஆனால் தினசரி வாழ்க்கையில் குழந்தைகள் பெரியார் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்து, தகப்பனாரிடமும் தாயாரிடமும் கோள் மூட்டுவதைப் பார்ப்போருக்கு இது மிகையே இல்லை எனலாம். ஸ்ரீமதி சீதாலக்ஷ்மியின் வேஷப் பொருத்தமும் நடிப்பும் தத்ரூபமாக இருந்தது. ஆனால் அவருக்குக் கொடுத்த பாட்டுக்கள்

மட்டும் அத்தனை அவசியமில்லை. அவை அசந்தர்ப்பமாகவே தோன்றின.

கோபாலய்யராக நடித்த ஸ்ரீ பரதனின் நடிப்பு வடநாட்டு நடிகரான K. C. டே, நமது தென்னாட்டு உயர்ந்த நடிகராகிய ஸ்ரீமான் K. P. கேசவன் ஆகியவர்களின் நடிப்பையும் நினைப்பூட்டுகிறது. பரதனின் முதன் முதல் நடித்த நடிப்பே முதல் தரத்தில் அமைந்ததானது மிகவும் போற்றக் கூடியது. அவருடைய சோகம் நிறைந்த பார்வையும், முகபாவமும் சிறைச் சாலையிலும் மற்ற இடத்திலும் சரஸா! சரஸா! வென்று அழைக்கும் பரிதாபக் காட்சியும் கல்நெஞ்சரையும் கலங்கச் செய்துவிடும் என்பதில் ஐயமே இல்லை. சப் கலெக்டரின் நடிப்பும் மிகவும் பொருத்தமாயும் அழகாயும் இருந்தது. இப்படத்தை நான் பார்க்கையில் அதைப்பார்க்க வந்தவர்களையும் கவனித்தேன். அனேக சந்தர்ப்பங்களில் புருஷர்களின் கை குட்டைகள் அவர்களது கண்ணிலும், ஸ்திரிகளின் தலைப்பு அவர்கள் கண்ணிலும் அழுத்தமாயமர்ந்ததையும், டாக்கி சப்தத்திற்குச் சரியாக மூக்கு உரியும் சப்தத்தையும் கண்டேன். சிரிக்காதவர்களை சிரிக்க வைக்கவும், அழாதவர்களை அழவைக்கவும் இந்தப் படத்திற்கு அபார சக்தி இருக்கிறது.

உயர்ந்த அம்சங்கள்:—கதையின் ஆரம்பம் முதல் முடிவு வரையில் வெகு தெளிவான சாதாரண வீட்டுச் சம்பாஷணையே துடர்ந்து செல்கிறது குறிப்பிடத்தக்கது. காட்சிகளின் பொருத்தங்கள் மிகவும் இயற்கையாக இருக்கின்றன. குழந்தைகளின் வேலையில்லாத் திண்டாட்டம், அமர்ஜோதியின் பெட்டில் கோரஸ் ப்பாட்டு முதலியன.

அசம்பாவிதமானவை:—முனிசாமியின் வீட்டுக்காட்சியில் ப்ரஸவ வேதனைப்படும் கூக்குரல்......அக்காலை கூறும் சம்பாஷணைகள் அதிகமாகக் கஷ்டப்படுவதாக மட்டும் காட்டி இருந்தால் போதும்...சிறு குழந்தைகள் ப்ரஸவத்தின் விஷயத்தைக் கூறுவது மிகவும் ஆபாசமும், அவமானமுமாகும். அத்தனை பெரிய ஊரில் ஒரே லேடி டாக்டர் இருப்பதாகக் கூறுவது பொருந்தாது. சில்லறை நர்ஸ்கள் எத்தனையோ பேர் இருக்கலாம். ஒரு லேடி டாக்டரையோ, நர்ஸையோ காட்டியிருந்தால் மிகவும் பொருத்தமாக விருக்கும். நல்ல அருமையான படத்தில் இவ்வித விகாரங்கள் இல்லாதிருப்பின் இன்னும் ப்ரகாசித்திருக்கும். சில பாட்டுக்கள் அனுவசியமான இடங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக பங்களா கேட்டில் முனுசாமி பாடுவது.

இம்மாதிரி சில குறைகள் காணப்படினும், இதுவரை இவ்வளவு முதன்மையான தமிழ்ப் படம் வெளிவரவில்லை எனலாம்.

# கவிதா மண்டலம்

## திருமால் இரட்டை மணி மாலை

*கட்டளைக் கலித்துறை*

அன்றிய வாண னரும்புய மாயிர மாழியினல்
கொன்று துவித்த துறைவிலி யுன்றன் றுறைகழலைத்
துன்று முடிமிசைச் சூட்டுவை யாயின்றுய ரொழிந்தே
என்று மழியா விரும்பத மெய்துவன் எம்பிரானே! 6

*வெண்பா*

எம்பிரான் எம்மான் இறைஞ்சு மடியார்க்குத்
தம்பிரான் கஞ்சத் தடங்கண்ணன்—செம்பொருளாய்
நின்றன் நெடுமறைக்கும் நேரா நிலைமையினன்
தன்றளை நெஞ்சே தரி. 7

*கட்டளைக் கலித்துறை*

தரித்த பெரும்புயத் தானவன் வேள்வியில் மாணுருவாய்
விரித்த கரத்தொடு மேதினி வேண்டியவ் வெய்யவனைச்
சிரத்து நலந்தரு சேவடி கொண்டுசெருக் கடக்கும்
பரித்த பெரும் புகழ்ப் பார்மகள் கேள்வனைப் பாடுவனே! 8

*வெண்பா*

பாடும் சுரும்புறையும் பைங்கூந்தல் பின்னைக்கா
ஈடி லெருதே ழிறவடர்த்தாய்—சூடும்
திருத்துளவத் தார்தந்தேன் சேயிழையா ளுய்யக்.
கருத்திலையோ ஐயா கழறு. 9

*கட்டளைக் கலித்துறை*

கழறு மிளையோன் கருத்தினைக் காணுக்கயற் கண்ணினள்
குழறு மழலைக் குளிர்மொழி கொண்டுகொடுங் கலையை
அழலு நெடுஞ்சிலை யம்பா லழித்தரு ளண்ணலடி
நிழலன்றி வேறுநிகழ் கதியுண்டோவிந் நீணிலத்தே 10

*வெண்பா*

நீணிலத்தை முன்னம் நெடுங்கோட்டின் ஏனமதாய்
ஏனுலவ வைத்தருளும் ஏந்தலே—பானுலவு
மென்மொழி யாலன்பர் வியந்தேத்த நீயுகந்தாய்
புன்மொழியும் கொள்வாய் புரிந்து. 11

*கட்டளைக் கலித்துறை*

புரிந்த பெருவேள்வி சென்று பொருபடை மாவலிபால்
விரிந்த நெடும்புகழ் வேதியர் மாணுரு வெய்ந்தவனைப்
பரிந்த மனத்துடன் பாரினில் மூவடிப் பாங்குறநீ
தெரிந்து கொடுத்தரு ளென்றவன் றூட்டுணை சேவிப்பனே! 12

பண்டித. திரு. ராகவாசாரியார்.
[1870—1935]

வெளிவந்து விட்டது

## அன்பின் சிகரம்

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினு மினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன? ......

நான்கணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

? ?

# மண்டலம்

முழு விவரங்களுக்கு
அடுத்த இதழைப் பாருங்கள்

## வெளிநாட்டு சந்தா நேயர்களே!

தமிழ்ப் பத்திரிகைகளில் வெளி நாட்டினருக்காகச் சந்தாவை அதிகமாக்காத பத்திரிகை நமது மோகினி ஒன்று தான் என்பது நீங்கள் அறிந்த விஷயம். உள் நாட்டில் காலணா தபாற் செலவில் அனுப்பும் பத்திரிகை வெளி நாட்டிற்கு அனுப்ப முக்காலணா ஆவதால் நமக்குச் செலவு அதிகமாயினும், தமிழ் மக்கள் யாவரும் ஒரே விலையில் நமது பத்திரிகையைப் படிக்க சௌகரிய மளிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சந்தாவை அதிகரிக்கவில்லை. நீங்கள் ஒவ்வொருவரும் உங்களாலியன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பி உங்களுக்கு வேண்டிய இனாம் புத்தகங்களை பெற்றுக்கொள்வதுடன், நமக்கு ஆதரவளிக்கக் கோருகிறோம்.

## ADVERTISEMENT RATES.

| | | | |
|---|---|---|---|
| Rs. 10 0 | for full page. | Rs. 3 0 | for quarter page. |
| Rs. 5 8 | ,, half ,, | Rs. 12 0 | ,, inner wrapper. |

**Special Rates for contract Advertisements.**

“ஜகன்மோகினி ஆபீஸ்” திருவல்லிக்கேணி.

WANTED

Candidates for Telegraph and Station Master class. Allowance Rs. 28. Uniform, passage and quarter free. Service essential. Rules and Entrance form on annas eight. **Director, Royal Telegraph and Ry. Duties College, Bombay 14.**

# ஜகன்மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

| 14-வது ஆண்டு ஆரம்பம் | நாவல் மாத சஞ்சிகை. | ஜனவரி 1937 |
|---|---|---|

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளி வரும்.
எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

| வருஷ சந்தா ரூ. 1-8 | ஜீவிய சந்தா ரூ. 25 | தனிப் பிரதி அணா 2 |
|---|---|---|

## ஜீவிய சந்தாநேயர்களுக்கு இனாம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| பங்கு 1<br>நளினசேகரன்<br>வீரவஸந்தா<br>3 வைரங்கள்<br>படாடோபத்தின் பரிபவம்<br>பிச்சைக்காரக் குடும்பம் | இனாமாக நாவல்கள் வேண்டுமோ ? | பங்கு 2<br>பரிமளகேசவன்<br>உத்தம சீலன்<br>கதம்பமாலை<br>சுகந்தபுஷ்பம்<br>கோபாலரத்னம்<br>புத்தியே புதையல் |
| பங்கு 3<br>கௌரீமுகுந்தன்<br>ஸாரமதி<br>சோதனையின் கொடுமை | எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணமனுப்புகிறீர்களோ, அத்தனாவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில் | பங்கு 4<br>தியாகக்கொடி<br>நவநீதகிருஷ்ணன்<br>சாமளநாதன்<br>ருக்மிணீகாந்தன்<br>மங்களபாரதி |
| பங்கு 5<br>வைதேகி<br>பத்மசுந்தரன்<br>ராதாமணி<br>காதலின் கனி<br>சாருலோசனா | ஒன்று இனாம் | மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம் |

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி.

## 1936-ல் வெளிவந்த நாவல்கள்

**இன்பஜோதி அல்லது பிள்ளைவீட்டாரின் கோள்ளை** ரூ. 1/4.

இரண்டு கொழுத்த பணக்காரர்க ளிடையே வரதக்ஷிணைப் பேய் தாண்டவ மாடிக்கொண்டிருந்த சமயம், இப் புத்தகம் அவர்களிடையே சென்று, பேயை ஓட்டி விமரிசையாக விவாகத்தை நடத்தி வைத்த பெருமை வாய்ந்தது.

**ராஜமோகன் அல்லது காதலின் மாட்சி.** ரூ. 1/4.

அந்தஸ்தில் வித்தியாச மிருப்பினும், இதயத்துடன் இதயம் கலந்த அன்பிற்கு வித்தியாசமில்லை என்ற தத்துவத்தையும், துஷ்ட சகவாசம் கொடுக்கும் பலன் என்ன ? இன்னும் இதுபோன்ற அரிய நீதிகளை விளக்கிக் காட்டும் அருமையான நாவல்.

**ப்ரேமப்ரபா அல்லது வாழ்க்கையின் நிழல்** அணா. 8.

மனித வாழ்க்கை நிழலின் பயங்கரமும், சமூகத்தின் கண்மூடித்தனமான கொடிய ஆட்சியின் விபரீதத்தினால் பச்சிளங் குழந்தைகளின் பரிதவிப்பும், உத்தமனையும் அதமனாகச்செய்யும் பணப் பேராசையும் இன்னும் இது போன்ற பல ருசிகரமான விஷயங்களும் நிறைந்தது.

**சுகந்த புஷ்பம்** (3-ம் பதிப்பு) ரூ. 1.

இரந்துண்ணுவோரிடத்தும், கற்பின் ஒளி உண்டென்றும், கற்பரசிக்கு அரசனும் துரும்பு என்றும் விளக்கிக்காட்டும் அருமையான நாவல் சமயோசிதமான பாடல்களும், அழகிய சித்திரப் படங்களும் நிறைந்தது.

### காதலின் கனி (2-ம் பதிப்பு) விலை ரூ. 2-8

இப்பெயருக்கேற்றவாறு ஒப்புயர்வற்ற காதல் ரசமும் அடங்காப் பிடாரியான மனைவியிடம் அகப்பட்டுக்கொண்டு சாதுவான புருஷன் படும் பாடும், குடுகுடுப்பாண்டி, மந்திரவாதி முதலியவர்களிடம் பாமர ஜனங்கள் அகப்பட்டுக்கொள்வதும், புதையல் எடுக்கும் விநோதமும், புதுமாதிரியான வழியில் துப்பறியும் ஆச்சரியமும் நிறைந்தது.

### சாருலோசனா (3-ம் பதிப்பு) விலை ரூ. 2-8

உண்மைக் காதலின் மகிமையை யறியாது பேராசைப் பிடித்த கிழவர்களுக்கு பண ஆசையினால் தம்மக்களைக் கொடுத்துப் பெற்றோர்கள் அடையும் பாபமும், பெண்மக்கள் படித்த திமிரினால் கட்டிய கணவனை மதியாது தலைகால் தெரியாமல் சுயேச்சையாகக் கெட்டழிந்து பரிபவப் படுவதும், இன்னும் மனத்தை யுருக்கும் சம்பவங்களும் நிறைந்த, சமூக சூழல்களை விளக்கிக் காட்டும் அதியற்புதமான நாவல்.

### ராதாமணி (3-ம் பதிப்பு) விலை ரூ, 2-8

கணவரின் நிழல் போலுள்ள உத்தம மனைவியின் வாழ்க்கையும், உயர்ந்த காதலர்களின் மாட்சியும், விலைமகளாகப் பிறந்தும் விலையற்ற குணத்தினால் பெருமையுற்று விளங்கும் அம்புஜத்தின் அருமையான ஜீவியமும், விலைமகளின் லீலையால் அன்யோன்ய தம்பதிகளின் சிதறலும், நேரில் விஷயமறியாது பிறர் சொல்லைக் கேட்டுச் சந்தேகிப்பதால் விளையும் தீமையும், இன்னும் அளவிலாத அநேக சாரங்களைக் கொண்ட துப்பறியும் நாவல்.

## சந்தா நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு

நாம் இத்தனை வருஷங்களாக மாதம் **6** பாரங்கள் (48 பக்கங்கள்) கதை மாத்திரம் போட்டு வந்தோம். இப்பொழுது தபால் அதிகாரிகள் பொது விஷயங்கள் நிறைய சேர்த்துப் போட வேண்டுமென்று வற்புறுத்துவதால், இரண்டு பாரங்கள் அவற்றைப் போட்டு, கதை **5** பாரங்கள் போட்டிருக்கிறோம். கதையில் ஒரு பாரம் குறைந்தாலும் மொத்தத்தில் **7** பாரங்கள் (56 பக்கங்கள்) ஆகியிருப்பதைச் சந்தா நேயர்கள் கவனிக்கக் கோருகிறோம்.

1. இடம் மாறும் நேயர்கள் தங்களது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படியில்லாவிடில் அவர்களது பழைய விலாசத்திற்கே சஞ்சிகை அனுப்பப்படும். அது தவறிவிடில் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

2. இங்கிலீஷ் மாதம் முதல் தேதியன்று எல்லா சந்தா நேயர்களுக்கும் நாம் சஞ்சிகையை அனுப்பிவிடுகிறோம். அது தபாலில் தவறிவிடில் உள் நாட்டுச் சந்தா நேயர்கள் 10-தேதிக்குள்ளும், வெளி நாட்டு நேயர்கள் 20-தேதிக்குள்ளும் தெரிவித்தால் மறுபடியும் நாம் அனுப்புவோம். அப்படியில்லாவிடில் இரண்டணு ஸ்டாம்பு அனுப்பித்தான் சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளவேண்டும். **இனமாக அனுப்ப முடியாது.**

3. கடிதம் எழுதுகையில் சந்தா நம்பரைக் குறிக்காவிடில் அனுவசியமான கால தாமதம் ஏற்படுமென்பதைக் கவனிக்கவும்.

## 14-வதாண்டுப் பரிசுகளின் விவரம்

பிப்ரவரி மாதம் 20-தேதிக்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களை குலுக்கிப் போட்டு **6** சீட்டுக்களை எடுத்து அவற்றிற்கு கீழ்க் கண்ட தொகையுள்ள புத்தகக்கள் பரிசாக கொடுக்கப்படும்.

ஏற்கனவே இந்த வருஷ சந்தாவை அனுப்பிவிட்டவர்கள் குறைந்தது ஒரு புதிய சந்தாவைச் சேர்த்துக் கொடுத்தால் அவர்களுடைய சந்தா நம்பரும் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| **ரு. 15.** முதற் பரிசு | **ரு. 10/-ல்** இரண்டு பரிசுகள் | **ரு. 5/-ல்** மூன்று பரிசுகள் |

1-3 forms Printed at Kabeer Printing Works, Triplicane, Madras.

## "ஜகன்மோகினி"யின்
## அன்பர்களுக்கு எமது வேண்டுகோள்

ஒவ்வொரு ஊரிலும்—முக்கியமாக ரெயில்வே ஸ்டேஷனுள்ள அல்லது அதற் கருகிலுள்ள ஊரிலும்—ஏஜன்டை ஏற்படுத்தி, நமது சஞ்சிகையையும், இதர நாவல்களையும் நமது அன்பர்களுக்கு சுலபமாகவும், அநுவசியமான காலதாமதமும் தபாற்செலவு மில்லாமலும்' கிடைக்கச் செய்யவேண்டுமென்பது எமது அவா. அதைப் பூர்த்தி செய்வதற்காக நமது சந்தா நேயர்கள் நமக்கு ஏற்கனவே ஏஜன்டுகள் இல்லாத ஊர்களிலுள்ள பத்திரிகை ஏஜன்டுகளை நமக்கு நேராக எழுதச் சொல்லியோ அல்லது அவர்களின் விலாசத்தை நமக்குக் கொடுத்தோ உதவி புரியுமாறு கேட்டுக் கொள்கிறோம். தற்போது நமக்குள்ள ஏஜன்டுகளின் விவரம் இதனுடன் வெளியிடப்பட்டிருக்கிறது.

# ஜகன்மோகினி கிடைக்கும் இடங்கள்

சென்னையில் பத்திரிகைகள் விற்கும் கடைகளிலும்,
சுதேசமித்திரன் புத்தகசாலை ரயில்வே ஸ்டால்களிலும்,
அடியிற் கண்டவர்களிடமும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

**சேலம்**
கோபால் நியூஸ் மார்ட்
சின்ன கடைத்தெரு

**பாலக்காடு**
Mr. நா. சூராளி
தினமணி ஏஜண்டு,

**தென்காசி**
Mr. U. பொன்னம்பலம்
ஸ்ரீ பொன்னம்பலம் ஜூனியர்
வித்தியாசாலை.

**பேரளம்**
Mr. K. மஹாதேவன்

**ஷண்முகநாதபுரம்**
ஸ்ரீமான். சொ. ராமநாதன்.

**ஆண்டிப் பட்டி**
ஸ்ரீமான். T. M. மாரியப்பன்

**புதுக்கோட்டை**
ஸ்ரீமான். P. V. சுப்ரமண்யம்
கீழண்டை வீதி.

**மதுரை**
Mr. V. M. நன்னையப்யன்
7, மஹால் 3வது தெரு.

**கரூர்**
ஸ்ரீமான். K. V செங்கபதி நாயுடு
கிழக்கு பலிகவாரு தெரு.

**திருச்சினுப்பள்ளி**
S. அஜீபா சாயபு
வைரவன் கோயில் தெரு

**மணப்பாரை**
ஸ்ரீமான் M. N. வைத்தியநாதய்யர்
நியூஸ் ஏஜண்டு, லக்ஷ்மி விலாஸ்.

**தூத்துக்குடி**
1. ஸ்ரீமான். P. சாமுவேல்
கிரேட் காட்டன் ரோடு.
2. ஸ்ரீமான். T. ராமசாமி
c/o காதி வஸ்திராலயம்.

**மன்னார்குடி**
ஸ்ரீமான் N. R. ரங்காச்சாரி
நியூஸ் ஏஜண்டு,
கோபால சமுத்திரம் தெற்கு வீதி.

**கோடைவாசல்**
ஸ்ரீமான்
K. V. கோதண்டபாணி பிள்ளை
கடைத்தெரு.

**தங்க வயல்**
A. T. கன்னியப்ப முதலியார்
A. T. தாமோதர முதலியார்,
மண்டி & பத்திரிகை வியாபாரம்
ஆண்டர்ஸன் பெட் (K. G. F.)

**புதுச்சேரி**
ஸ்ரீமான். ரா. நாராயணசாமி
தினமணி ஏஜண்டு.

**கோயம்பத்தூர்**
The International News Agency,
Variety Hall Road.

**கீழச்சிவல்பட்டி**
ஸ்ரீமான்
பழ. ச. கருப்பன் செட்டியார்

**கொழும்பு**
ஸ்ரீமான். A. K. சாமி
191, நோரிஸ் ரோடு.

**நாகப்பட்டணம்**
ஸ்ரீமான் B. வெங்கடராமன்
சாசுவத நிதி கட்டிடம்,
நீலா தெற்கு வீதி.

**திண்டுக்கல்**
ஸ்ரீமான். K. M. ராமசாமி
தினமணி ஏஜண்டு.

**கும்பகோணம்**
1. K. S. நாராயணஸ்வாமி & கம்பெனி
2. காதி வஸ்திராலயம்
மடத்துத் தெரு.

**பெரிய காஞ்சீபுரம்**
ஸ்ரீமான். N. சுப்ரமண்யம்
12, ரெட்ட பிள்ளையார் கோவில் தெரு.

**திருநெல்வேலி ஜங்ஷன்**
ஸ்ரீமான்.
K. C. சுப்ரமண்ய முதலியார்
கண்ணம்மன் கோயில் தெரு.

**மாயவரம்**
ஸ்ரீமான்.
ஷேக் ஹுஸ்மான் ஸாகேப்
செட்டிதெரு, சின்னத்தைக்கால்.

**உதகமண்டலம்**
T. M. ஆரோக்கியசாமி & சன்ஸ்
மார்க்கட்.

**வேலூர்**
ஸ்ரீமான். D. K. ராமசேஷய்யர்
நியூஸ் ஏஜண்டு.

**ராசீபுரம்**
ஸ்ரீமான். R.G. ராமகிருஷ்ண ஐயர்
ஸ்ரீராம விலாஸ் லைப்ரெரி.

**ஈரோடு**
ஸ்ரீமான்.
V. சௌந்தரராஜய்யங்கார்,
கெரோஸின் டிப்போ
245 லார்ட் நேபியர் வீதி.

**பம்பாய்**
D. Chari & Co.
11, Bhimdiwala Building
Matunga (Bombay 19.)

**ரங்கூன்**
புவனகதா புத்தகசாலை,
நெ. 229, பேயர் வீதி,
கல்கத்தா ரோடு
ரயில்வே ப்ளாக்.

**மலாய் நாட்டு ஏஜண்டு:—**
**கோலாலம்பூர்**
ஸ்ரீமான் P. சிவகுரு
108 பிரிக்பீல்ஸ் ரோடு
தபால் பெட்டி நெ. 255.

# ஸ்ரீமான் வடுவூர் K. துரைசாமி ஐயங்கார்

## எழுதிய நாவல்கள்

| | ரூ. | அ | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| பூர்ணசந்திரோதயம் | 7 | 8 | இராஜேந்திரமோஹனா | 1 | 4 |
| சௌந்திர கோகிலம் | 6 | 0 | வஸந்தகோகிலம் | 1 | 4 |
| மாயா விநோதப் பரதேசி | 5 | 0 | வித்யாசாகரம் | 1 | 4 |
| திகம்பர சாமியார் பால்யலீலை | 5 | 0 | முத்துலக்ஷ்மி | 1 | 4 |
| மதன கல்யாணி | 4 | 8 | நீலலோசனி | 1 | 2 |
| புஷ்பாங்கி | 3 | 0 | கலியாணசுந்தரம் | 1 | 2 |
| மிஸிஸ் லீலாமோஹினி | 3 | 0 | நங்கை மடவன்னம் | 1 | 2 |
| மேனகா | 3 | 0 | சிங்கார சூர்யோதயம் | 1 | 2 |
| கும்பகோணம் வக்கீல் | 3 | 0 | மிஸ்டர் பூச்சாண்டி எம்மே | 1 | 2 |
| விலாசவதி | 3 | 0 | டாக்டர் சோணாசலம் | 1 | 2 |
| மன்மத புரியின் மூடுமந்திரம் | 2 | 12 | சோமசுந்தரம் | 1 | 2 |
| கனகாம்புஜம் | 2 | 12 | பச்சைக்காளி | 1 | 2 |
| பாலாமணி | 2 | 8 | சமய சஞ்சீவி | 1 | 2 |
| சுயமரணபுரி மர்மம் | 2 | 8 | சொக்கன் செட்டி | 1 | 2 |
| தில்லைநாயகி | 2 | 4 | பூஞ்சோலையம்மாள் | 1 | 2 |
| துரைக்கண்ணம்மாள் | 2 | 4 | தங்கம்மாள் | 1 | 2 |
| சதானந்தபோதகசாமியார் | 2 | 4 | சிவராமகிருஷ்ணன் | 1 | 2 |
| பன்னியூர் படாடோபசர்மா | 2 | 4 | பிச்சைமுத்து கோனார் | 1 | 2 |
| திருபுரசுந்தரி | 2 | 0 | பாவாடைச் சாமியார் | 1 | 2 |
| லக்ஷ்மீகாந்தம் | 2 | 0 | மாயாசுந்தரி | 0 | 12 |
| காந்திமதி | 1 | 12 | திவான் லொடபடசிங் | 0 | 12 |
| வஸந்தமல்லிகா | 1 | 8 | | | |

## "ஜகன்மோகினி" அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி

### காலஞ்சென்ற பண்டித திரு. ராகவாசாரியார் இயற்றிய நூல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | துருவ வெண்பா | 0 | 8 |
| 2. | சம்பு ராமாயணம் | 0 | 10 |
| 3. | நீதி மஞ்சரி | 0 | 5 |
| 4. | திருமால் வெண்பா | 0 | 4 |
| 5. | சிவபிரான் துதி | 0 | 3 |
| 6. | ராஜராஜேசுவரி | 0 | 2 |
| | | 2 | 0 |

சந்தா நெ. குறிப்பிட்டு ஆர்டர் செய்யும் அன்பர்களுக்கு மேற்கண்ட புத்தகங்கள் எல்லாம் ஒரே காலத்தில் வாங்கினால் 1 8 0க்குக் கொடுக்கப்படும். தனித் தனியாக வாங்குவதானால் தபால் செலவு இனாம். வி. பி. கிடையாது. முன்பணம் தான் அனுப்பவேண்டும்

விலாசம்:- ஜி. ஆர்.

C/o "ஜகன்மோகினி"

## "ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

### சங்கு நூல்கள்

மகாத்மா காந்தி எழுதிய

| | ரூ. | அ. |
|---|---|---|
| சத்திய சோதனை I | 1 | 8 |
| ஷை II | 2 | 0 |
| இல்லறமும் பிரம்மசரியமும் | 0 | 6 |
| அனசக்தியோகம் | 0 | 4 |
| ஆரோக்கிய வழி | 0 | 4 |
| மகா தியாகம் | 0 | 4 |
| நீதி தருமம் | 0 | 2 |
| கீதாபோதனை | 0 | 2 |
| உத்தம வாழ்க்கை | 0 | 2 |
| ஹிந்து தர்மம் | 0 | 2 |

ரோமேன் ரோலண்டு எழுதிய

| | | |
|---|---|---|
| மகாத்மா காந்தி (புதிய பதிப்பு) | 0 | 4 |

ரஷ்ய ஞானி டால்ஸ்டாய் எழுதிய

| | | |
|---|---|---|
| ஆறடி நிலம் | 0 | 4 |

மகாதேவ தேசாய் எழுதிய

| | ரூ. | அ. |
|---|---|---|
| பர்டோலிக் கதை | 0 | 12 |

வில்லியம் தர்ஸ்டன் எழுதிய

| | | |
|---|---|---|
| இல்லற மகா ரகஸியம் | 0 | 4 |

பகதூர்ஜி கமிட்டி அறிக்கையான

| | | |
|---|---|---|
| இந்தியாவின் கடன் பொறுப்பு | 0 | 4 |

க. சந்தானம் எழுதிய

| | | |
|---|---|---|
| சத்திய சமாஜம் | 0 | 4 |

வ. வே. ஸு. அய்யர் எழுதிய

| | | |
|---|---|---|
| மங்கையர்க்கரசியின் காதல் கதைகள் | 0 | 8 |

குரு கோவிந்தசிங்

| | | |
|---|---|---|
| சீக்கியர்களின் வீரத்தலைவன் | 0 | 12 |

### பாரதியார் நூல்கள்

#### கதைக் கோத்து

இதில் பாரதியார் தன் சொந்த அனுபவங்கள், அபிப்பிராயங்கள், இன்னும் நமது மடமை, மூடபக்தி, ஸ்திரீகளின் நிலைமை இவை போன்ற ஸமுதாய வாழ்வின் குறைகளை நாம் அறவே ஒழிக்கு முறையையெடுத்துரைக்கிறார். எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது. அணா 8

#### பகவத் கீதை

நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியாரின் அழகிய தமிழ் உரையும், விரிவான நூன்முகமும் அடங்கியது. காலிகோ பைண்டு அணா 12

| | |
|---|---|
| ராப்பர் பைண்டு ,, | 8 |
| பாகெட் கீதை (தமிழுரையுடன்) காலிகோ ,, | 7 |
| பாகெட் கீதை தமிழுரையுடன் ராப்பர் ,, | 5 |

#### வசனங்கள்

இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோக ஸூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கி யுள்ளன. ரூபா. 2.

#### கவிதைகள்

தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திச்சூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்தன ரூபா. 2-8.

#### கட்டுரைத் தொகுதிகள்

| | |
|---|---|
| தத்துவம் | அணா. 10 |
| மாதர் ,, | 8 |
| கலைகள் ,, | 8 |
| சமூகம் ,, | 8 |

## 5-வது அதிகாரம்

### ஆடு திருடிய கள்ளன்—வாடி வருந்திடும் உள்ளம்

திடுக்கிட்டுப் பதறியவாறு நின்ற வஸந்த குமாரிக்குத் தான் வெகு நாட்களாகப் பார்க்கா திருந்த தன் சகோதரியைப் பார்த்த சந்தோஷங் கூட மற்ற வேதனைகளினால் மறைந்து விட்டது. இமை கொட்டும் நேரம் தவித்தாள். உடனே சடக்கென ஓர் யோசனை தோன்றப் பெற்றவளாய் தான் வந்த வழியோடு திரும்பிச் சென்று நான்கடி எடுத்து வைத்தாள் தந்தையின் எதிரில் வழி மறித்து நின்று "அப்பா! அப்பா! அதோ இருக்கும் ஸில்க்குக் கடையை நீங்கள் பார்த்தீர்களா! அதில் ஒரு புடவை நிரம்பவும் நன்றாயிருக்கிறது. அது எனக்கு வேண்டும் அப்பா! படக் கடையைப் பார்த்தீர்களா! கடவுள் படங்களும், இன்னும் மற்ற வேறு படங்களும் வெகு அழ காக விருக்கின்றன. நமது கிராமத்துக்குச் சில படங்கள் வாங்க லாம்பா! வாருங்கள்" என்று கொஞ்சலாகக் கூறி, அவரைப் பின் புறமே திருப்பி யழைத்துச் செல்ல எத்தனித்தாள்.

இதற்குள் திருவேங்கடம் "அம்மா! உன்னிஷ்டப்படியே வாங் கிக் கொள்ளு. பணமென்னமோ உன்னிடமிருக்கிறது. உன் கை வேலை சாமான்கள் அங்கிருக்கிறதாம்; வெகு அழகாக இருக்கிற தென்று எல்லோரும் பரம சந்தோஷப்பட்டுக் கொண்டு பேசு கிறார்கள். நான் அவைகளைப் பார்த்துக் கொண்டு அங்கேயே உட் கார்ந்திருக்கிறேன். நீ உனக்கு வேண்டிய எல்லாவற்றையும் வாங் கிக் கொண்டு வந்துவிடு. சுற்றுவதற்கு என்னால் முடியவில்லை. கால் நோகிறது" என்று கூறிக்கொண்டே பின்னும் இரண்டடி முன்னே நகர்ந்தார்.

வஸந்த குமாரியின் மார்பு படபட வென்று அடித்துக் கொள் கிறது. "இத்தனை பெரிய பகிரங்க இடத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியுள்ள இடத்தில் இவர் என்ன செய்து விடுவாரோ தெரிய வில்லையே......ஹா!......அதோ ப்ரகாசம் குழந்தையைத் தூக்கிக்கொண்டு நிற்கிறரே. அதைக் கண்டதும் இன்னும் விபரீத மாகிவிடுமே! ஐயோ! இன்று ஏதோ சோதனைதான் போல் தோன்று கிறது.......ஆகா!......என் செல்வச் சகோதரியின் குழந்தை யல் லவா இது!......என்ன அழகு! என்ன வசிகரம்!......ஐயோ! குழந் தையைத் தாவி யணைத்துக் கொஞ்ச வேண்டு மென்று ஆவல் மீறு கிறதே......உம்"......என்று ஒரு வினடிக்குள் பலவிதமான எண் ணங்களுடன், தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு "அப்பா! இத்தனைக் கூட்டத்து மத்தியில் நான் தனிமையில் ஒரு கடையில் நின்று பேரம் பேசினல் யாராவது ஏதேனும் சொல்வார்கள். சோதாக் கூட்டங்கள் வரும். எனக்குப் பயமாக விருக்கிறது. நீங்கள் வாருங்கள்" என்று கூப்பிட்டுக் கையையும் பிடித் திழுத்தாள்.

"அம்மா! குலசேகரன் எங்கே போனன்? அவனை அழைத் துச் செல்லும்மா! நான் கடையில் உட்கார்ந்து கொள்ளுகிறேன். கால் வலிக்கிறது....குலசேகரா! குலசேகரா!" என்று இரண்டு முறை கூப்பிட்டார். இத்தனை நாளாய்ப் பிழைத்த கவுரவம் குன் றிப் போகும்படி தோல்வியும், அவமானமும், மனஸ்தாபமும், குடும்பச் சிதறலும் போதும். இன்னும் இங்கு விபரீதமான சம்பவம் ஒன்றும் நடக்காதிருந்தால் அதுவே போது மென்றும் அதற்கு என்ன வழி செய்யலா மென்றும் யோசித்துக் கொண்டிருந்த வஸந்தகுமாரி திடீரென்று "ஹா......அப்பா!......அப்பா...... காலில் ஏதோ கடித்து விட்டது. வலி தாங்க முடியவில்லை. தேளாக விருக்குமோ வென்று நினைக்கிறேன்.......நாம் இதைச் சந்தடி செய் தால் கூட்டங் கூடிவிடும்; அவமானமாகி விடும். நமக்குத் தெரிந்த பலரும் வந்திருக்கிறர்கள். நாம் நாளைய தினம் மீண்டும் வந்து பார்த்தது வாங்கிக் கொண்டு போகலாம். இன்று வீட்டிற்குப் போய் விடுவோம். வாருங்கள்; வாருங்கள்." என்று தவிதவித்தவாறு நிற்க மாட்டாது கூப்பிட்டாள்.

திருவேங்கடத்திற்கு அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடிய வில்லை. உடனே புறப்பட்டு வந்து விட்டார். எப்படியாவது இந்த இடத்தை விட்டுப் போய் விட்டால் போதும் என்று எண்ணிய வஸந்தகுமாரிக்கு தாங்கள் வண்டியிலமர்ந்து வண்டி கொஞ்ச தூரம் நகர்ந்த பிறகு தான் அவளுடைய மார்பின் படபடப்பு சற்று அடங்கியது. ஆனால் தான் நடிக்க வாரம்பித்ததை விட வில்லை. "அப்பா! அம்மா!" வென்று முனகிய படியே காலைப் பிடித்துக் கொண்டாள். வீட்டிற்கு வந்ததும் ஏதோ ஒரு மருந் தைக் காலில் தடவிக் கொண்டு படுத்து விட்டாள்.

உண்மையில், மனத்தில் வேதனையே யன்றி காலில் வேதனை இருந்தாலல்லவோ! தன் கண்ணன சகோதரியின் குழந்தையை இது காறும் கண்ணாலும் கண்டதில்லை. இன்று அதனைப் பார்த்தது முதல் வஸந்தகுமாரியின் மனம் அக்குழந்தையையே நாடிச் சென் றது. எல்லாம் ஒழுங்காக விருந்தால் அக்குழந்தையுடன் தான் எத் தனையோ ஆநந்தமாகக் குலாவலாமல்லவா? அது இல்லாதுபோய் விட்டதே......என்று நினைக்கும்போது கண்ணீரும் சிந்தி விட்டது. அவளால் அந்த உணர்ச்சியை மாற்றவே முடியவில்லை. தான் ஓடிப் போய் அக்குழந்தையை எடுத்துக் கொண்டு தன் ஆவல் தீரக் குலாவி மகிழலாமா வென்று ஆவல் துடிக்கிறது. உடனே பழைய சம்ப வங்கள் நினைவுக்கு வருகிறதால் அதை மாற்றிக் கொண்டாள்.

இன்னிலைமையில் அவள் தத்தளித்துக் கொண்டே படுத்திருக் கையில், குலசேகரன் கண்காட்சி பார்த்துவிட்டு வீட்டிற்கு வந் தான். அவன் முகத்தில் துடி துடிப்பும், படபடப்பும் காணப் பட் டது கண்டு வஸந்தகுமாரி பயந்தவளாய் அவன் முகத்தையே பார்த்தாள். குலசேகரன் வஸந்தகுமாரியை நோக்கி "வஸந்த குமாரீ! சகோதரியின் பவிஷை...ஆணவத்தை, கர்வத்தை, அவளு டைய திமிரைப் பார்த்தாயா!

நான் கடைகளெல்லாம் சுற்றிப் பார்த்துக் கொண்டே வரு கையில் அவளும் அவள் குழந்தைகளும் ஒரு கடையில் நின்றிருந்த தைக் கண்டதும் இயற்கைக்கு விரோதமாக ஓர் உணர்ச்சியும், பாச

சென்னை-600 008
182999

மும் என்னை மீறிப் பொங்கியது. அதன் காரணம் அவள் குழந்தையின் அதி யற்புதமான அழகும், சுறுசுறுப்புமேயாகும். குழந்தை விளையாடிக் கொண்டு எதிர்க் கடைக்கு ஓடி வந்து அங்குள்ள பொம்மைகளையே பார்த்தது.

அவள் இதைக் கவனிக்க வில்லை. எனக்கு அக்குழந்தையை எடுத்துக்கொள்ள வேணும் என்று ஆவல் தூண்டியபோதும் மனம் இடங் கொடுக்கவில்லை. அக்குழந்தை ஆசையாய்ப் பார்க்கும் பொம்மையின் விலை 4 ரூபாய் என்று விசாரித்தறிந்தேன். பெரிய ஸெலுலாயிட் பொம்மை. நாலு ரூபாயைக் கொடுத்து பொம்மையை வாங்கி அதன் கையில் கொடுத்தேன். குழந்தைக் குண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. உடனே அதை எடுத்துக் கொண்டு ஓடிப்போய் தன் தாயிடம் காட்டி எதிர்க் கடையில் நிற்கும் என்னையுங் காட்டியது.

அவ்வளவுதான் கிருஷ்ணகுமாரியின் கண்கள் சிவந்தன. கோபாக்கினி முகத்தில் ஜொலித்தது. குழந்தையைப் பிடித்து இழுத்து தலையில் குட்டி, மிரட்டிப் பின் அந்த பொம்மையைப் பிடுங்கி நான் நின்ற இடத்திற்கு நேரே வீசி எறிந்து விட்டு "பெத்த தாயின் சவத்திலும் விழிக்க ஸ்வதந்திர மற்ற எனக்கு—என் குழந்தைக்கு—பொம்மை வாங்கிக் கொடுக்க வெட்கமில்லாது வாஞ்சை வந்து விட்டதோ? இந்த வாங்க அவளுக்கு மட்டும் சுதந்தரம் ஏது?' என்று திட்டிக் கொண்டே அடுத்த கடைக்குள் மறைந்து விட்டாள்.

அங்குக் கூடிய எத்தனையோ பேர்கள் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு உண்டான ஆத்திரத்திற்கு எல்லையே இல்லை. எதிர்த்துத் திட்டிவிட நினைத்தேன். ஆனால் பெரிய பெரிய மனிதர்களெல்லாம் அங்கிருந்ததால் மானத்திற்கஞ்சி அந்த பொம்மையை எடுத்து ஒரு ஏழைக் குழந்தையிடம் கொடுத்து விட்டு நான் வந்து விட்டேன். அந்த தடிக்கழுதையின் திமிரைப் பார்த்தாயா?" என்றான்.

வஸந்தகுமாரிக்கும் ஆத்திரமே பொங்கி வந்து விட்டது, என்று மில்லாத தைரியத்துடன் பேசத்தொடங்கி "ஆமண்ணு! சாவு வாழ்வு இரண்டையும் துறக்கும்படியாகப் பகைமையை வளர்த்துவிட்டு, பெற்ற தாயின் சவத்தின் முகத்திலும் விழிக்கக் கூடாதென்று கிராதகத்தனம் செய்து விட்ட பிறகு நீங்கள் குலாவு வது யாருக்குத்தான் பிடிக்கும்? அவளும் மனுஷிதானே! உணர்ச்சி உள்ளவள் தானே! இந்த தேர்தலின் நிமித்தம் இத்தகைய பகையை உண்டாக்கி விட்ட பின்னர் இனி குலாவுவதும் வேண்டுமா!" என்று கூறி முடிக்கு முன்னர் குலசேகரன் பின்னும் பன்மடங்கு அதி கரித்த கோபத்துடன் விரைக்க விரைக்கப் பார்த்தபடியே, "ஆகா! ......என்ன சொன்னுய்......உன் தலைக் கிறுக்கும் அக்காளைப் போலத் திரும்பிவிட்டதோ! அந்த மாதிரி கிறுக்கு உனக்கு வந்தால் நீ அதோகதியாகப் போகவேண்டியதுதான்! உன்னைத் திரும்பிப் பார்க்க ஒரு நாய் கூட வராது. ஜாக்ரதை. உன்னிலைமையை அறிந்து பேசு" என்று கடுகடுத்தவாறு கூறிவிட்டுப் போய் விட் டான். ஐயோ பாவம்! பேதைப் பெண்ணின் நெஞ்சம் எவ்விதந் தானிருக்கும்?

இத்தனை கடுமையாக இது வரையில தன்னை யொன்றும் சொல்லியிராத குலசேகரன் இன்று இவ்விதம் பேசி விட்டதனுல் வஸந்தகுமாரிக்குப் பெருங் கவலையும், அபாரமான துக்கமும், தன் னெதிர் கால வாழ்க்கையின் விபரீதம் எவ்வித மிருக்குமோ வென்ற பயமும் அவளைச் சுற்றிக் கொண்டன தேள் கொட்டி விட்ட தென்று தெரிவித்து வந்த வேதனையை விட ஆயிரந் தேள் கொட்டி யது போன்ற மனவேதனை உண்டாகி விட்டது. அதற்குமேல் எது வும் பேசாமல் இடிந்து போய் விட்டாள்.

கண் காட்சிச் சாலையில் சிவப்ரகாசம் கிருஷ்ணகுமாரியுடன் பேசவாரம்பித்ததும் தன்னை மீறிய வாஞ்சையுடனும் மனே வெழுச்சியுடனும் தடை கட்டிய நாகம்போல நின்றவன் கிருஷ்ண குமாரியின் குழந்தையை ஆவலுடன் வாங்கி அதை யணைத்துப் பல முத்தங்களிட்டான். குழந்தையின் கையில் ஒரு 10 ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து "கண்மணி! உனக்கென்ன வேண்

டுமோ அதை வாங்கிக் கொள்ளு. பொம்மை வேண்டுமா! பட்டுப் பாவாடை வேண்டுமா! எது வேண்டும்?'' என்று ஆநந்தமாகக் குலாவிய வாறு கேட்டான்,

அக்குழந்தைக் குண்டான சந்தோஷத்திற்கு அளவே இல்லை. கிருஷ்ணகுமாரிக்கு இதைத் தட்டவும் முடியவில்லை. வாங்கிக் கொள்ளவும் சற்று சம்மதக் குறைவாகவே இருந்தது; "இதெல்லாம் எதற்கு? வேண்டாம்......ப்ரகாச்! உங்களைப் பார்ப்பதற்குக் கூட எனக்கு மிக்க விசனமாயும் வெட்கமாயும் இருக்கிறது. காலச் சக்கரத்தின் கோலம் வேறாகிவிட்டது. நீங்கள் ஊருக்குப் போகாமவிருந்திருந்தால் ஒருகால் நீங்கள் நினைத்திருந்தபடி நடந்திருக்கலாமோ என்னவோ! என்னுடைய முடிவே வேறு மாதிரியாவதற்குத் தான் என்னுடைய மனமும் வேறு வழியில் என்னையும் மீறி கட்டுக் கடங்காது சென்று விட்டது. இனி அவைகளைப் பேசுவதும் தகாது. நீங்கள் இப்போது பெரிய பதவியிலிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன்

அப்பாவின் வீட்டு விஷயமெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அப்பா ப்ரியப்பட்டால் வஸந்தாவைக் கொடுத்து மணம் செய்து சந்தோஷப் படலாம். யார் அதிர்ஷ்டம் எப்படியோ?'' என்று ஒரு மாதிரி இழுத்தாற்போல் கூறினாள். ப்ரகாசத்திற்குப் பதில் பேசவும் முடியாமல் தொண்டையை ஏதோ ஒரு வேதனை அடைத்துக் கொண்டது. கண்ணில் நீர் நிரம்பிவிட்டதை மெல்ல மறைத்துக் கொண்டு கிருஷ்ணகுமாரியை ஒரு வித பரிதாபத்துடன் பார்த்தான்.

அந்த பார்வையானது "என் வாழ்க்கையின் விளக்கை நீ அணைத்து விட்டு இன்னொருத்தரைக் கைகாட்டுவது தருமமா! இது என் மனத்திற்கு த்ருப்தியளிக்குமா?''வென்று சுறுக்கெனக் கேட்பது போல் கிருஷ்ணகுமாரிக்குத் தோன்றியது. உடனே அவள் தலையும் கீழே கவிழ்ந்து, மனம் பலவிதமான எண்ணங்களில் குழம்பிப் போய் விட்டது.

இத்தனை காட்சிகளையும் சற்று தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டே இருக்கும் சாந்தமூர்த்தியின் மனம் முன்னிலும் அதி கரித்த சந்தேகத்துடன் பதைக்கின்றது. இருவருடைய முகமாறு தலும், கண்ணீர்த் துளி சிந்துவதும் அவனது சந்தேகத்தை ஊர்ஜி தப் படுத்தின. தன் மாறுதல்களைச் சற்றும் வெளியிட்டுக் கொள் ளாது வெகு ஊக்கத்துடன் கவனித்துக் கொண்டு வந்தான்.

ப்ரகாசம் சற்று மனத்தைத் தேற்றிக் கொண்டு "கிருஷ்ண குமாரீ! என்னால் பேசக் கூடவில்லை. நான் சென்றுவருகிறேன். நான் பாக்யம் செய்திருந்தவனாயிருப்பின் இன்று கனவிலும் நினைக் காமல் உன்னைச் சந்தித்ததே போல மீண்டும் சந்திக்கிறேன். இல் லையேல் நான் சீமைக்குப் போகும் அன்று நீ உன் மனமுவந்து அளித்த உன் புகைப்படத்தின் மூலம் இத்தனை நாள் இருந்தது போல் இன்னமும் என் காலத்தை முடிக்கிறேன். என்னால் நிற்கவும் முடியவில்லை" என்று கூறிக்கொண்டே குழந்தையைக் கீழே விட் டான். குழந்தை வெகு வேகமாகத் தன் தாயிடம் ஓடித் தாவிய காட்சி ப்ரகாசத்தின் இருதயத்தில் அவனை மீறிய ஓர் ஆநந்த உணர்ச்சியைக் கொடுத்தது. இமை கொட்டாமல் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு வெறி கொண்டவன்போல் பேசத் தொடங்கி "கிருஷ்ணகுமாரீ!......கிருஷ்ணகுமாரீ! நான் மகா பாவி......நான் கொடிய துரதிர்ஷ்டம் பிடித்தவன். நான் ஆசிப்பது எதுவும் எனக்குத் தக்காது. உன் குழந்தை என்னுள் ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. அதைப் பிரிய மனமில்லை. என்னையோர் பொருட்படுத்தி, என்றாவது நான் இச்சிக்கும்போது குழந்தையை என்னிடம் கொடுப்பாயா? என்னாவலை——என்று முடிப்பதற்குள்,......

கிருஷ்ணகுமாரி பேசத்தொடங்கி "ப்ரகாச்!...நீங்கள் சொல்வ தைக் கேட்கும்போது எனக்கு மிகுந்த விசனமாக விருக்கிறது. எங்கள் குடும்ப விவகாரங்கள் ஒன்றும் உங்களுக்குத் தெரியாது. என் பிறந்தவீட்டு மனஸ்தாபத்தின் கொடுமையினால் என் மாமனா ரும், என் புருஷனும் குழந்தைகளை வெளியிலனுப்பவும் பயந்து நடுங்குகிறார்கள். யார் என்ன செய்துவிடுவார்களோ வென்ற பய

மும் சந்தேகமும் நிறைந்துவிட்டதால் சதா அவர்களின் பாதுகாப்பிலேயே குழந்தைகளிருக்கின்றன. நான் வாரம் இரு முறை ஸ்திரீகள் சங்கத்திற்கு (லேடீஸ் க்ளப்) வருவேன். அக் காலையில் வேண்டுமாயின் சற்று நேரம் தாங்கள் குழந்தையை எடுத்துச் செல்லலாம். என் மாமனருக்கும் புருஷனுக்கும் இது தெரியவேண்டாம்'' என்று மெல்ல கூறினள்.

ப்ரகாச் மகா புத்திசாலியும், பெருந்தன்மையான குணம் படைத்தவனுமாகையினல் "கிருஷ்ணு! உனக்கு ஏதேனும் தீமை நேரும் முறையிலோ, உன் மாமனர், புருஷன் முதலியோருக்கு மனம் வருந்தும்படியோ, சந்தேகிக்கும்படியோ நான் என்னுயுள் மறைந்தாலும் நடக்கமாட்டேன். இதை மட்டும் நீ உறுதியாக நம்பு. கிருஷ்ணு! நான் அபாக்யவானுக விருப்பினும் உன்னை மணந்த பாக்யவானின் சந்தோஷத்தை நான் ஒருபோதும் கெடுக்கமாட்டேன்...நாம் இந்த பகிரங்க இடத்தில் ஒதுக்குப்புறமாக நின்று பேசுவதும் சரியில்லை. ஆகையினல் நான் வருகிறேன்'' என்று கூறிக்கொண்டே குழந்தையை மீண்டும் ஆவலுடன் அணைத்து முத்தமிட்டான்.

"ப்ரகாச்!...நடந்துவிட்டதை இனி அடியோடு மறந்துவிடுங்கள். இவைகளைக் கேட்கக் கேட்க என் மனம் என்னையறியாது ஏதோ விசனிக்கின்றது. என்னுடைய அறியாமையை நான் இப்போது உணர்கிறேன். என் சிறு பிராயத்தின் விபரீத குணத்தினுலும், நவ நாகரிகத்தின் கோலத்தினுலும் நான் என் மனத்தைத் தளர விட்டுவிட்டேன். அவரையே மணக்க என் முழு மனதுடன் இச்சித்தேன். பிடிவாதமாக நானே முயன்று பெற்றோருக்கு இஷ்டமில்லாமலே மணந்தேன். நாட்கள் ஏற ஏற நான் செய்த மூடத்தனத்தை உணர்ந்து வருந்துகிறேன். இந்த அடங்காத ஆசை விவாகத்தின் பலனல் பெற்றோரையும், உடன் பிறந்தோரையும், உற்றார் உறவினர் யாவரையும் இழந்தேன்; ஒண்டியாகிவிட்டேன். நான் ஆதியில் தலைகால் தெரியாமல் துள்ளி எதிர் பார்த்ததற்கு நேர் விரோதமாக என் வாழ்க்கை முடிந்துவிட்டது. இனி என்ன உபயோகம்?

ஆ...அதோ...என் மாமனூர் வருகிறூர். குழந்தையை விட்டு விட்டு நீங்கள் போய்விடுங்கள். நீங்கள் என் வஸந்தகுமாரியை மணந்து சுகமே காலத்தைக் கடத்துங்கள். வாழ்நாளைப் பாழ்படுத்த வேண்டாம்...என்றுள். ப்ரகாச் குழந்தையை விட்டுவிட்டு ஒரு நொடியில் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு அந்த கும்பலின் மறைவில் மறைந்துவிட்டான்.

கிருஷ்ணகுமாரிக்கு மனத்தில் சொல்லறியாத சங்கடமும் வேதனையும் உண்டாகிவிட்டதால் ஒன்றும் தோன்றுமல் சிறிது நேரம் தம்பித்து நின்றுள். இவை யனைத்தையும் தூரவிருந்து பார்த்துக்கொண்டிருந்த சாந்தமூர்த்தி அவன் பெயருக்கேற்ப வெகு சாந்தத்துடன் கிருஷ்ணகுமாரி இருக்குமிடத்திற்கு ஒன்றுமே அறியாதுபோல் வந்து, குழந்தையைத் தாவி எடுத்துக் கொண்டு "என்ன கிருஷ்ணு! ஏன் ஏதோ ஆழ்ந்த யோசனை செய்கிருய்? என்ன வாங்கவேண்டுமென்று உத்தேசம்? யோசிப்பானேன்... வாங்கிக்கொள்ளு. இந்தா ரூபாய்" என்று ஒரு நோட்டை நீட்டினுன். இந்த குரலைக் கேட்டபிறகே தன்னுணர்வு பெற்ற கிருஷ்ணகுமாரிக்குத் தூக்கி வாரிப்போட்டது. தான் ப்ரகாசத்துடன் பேசுகையில் பார்த்துக்கொண்டே வந்துவிட்டாரோ!...என்று நினைக்கும் போது மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. முகத்தில் அசடு வழிய பேந்தப் பேந்த விழித்தபடியே நின்றுவிட்டாள்.

---


## அனுதைப் பெண்

அல்லது

### கனிந்த காதலர்

அனுபவம் நிறைந்த ஆச்சரிய சம்பவங்களும்,
இணையிலாக் காதலும், ஈடிலாப் பக்தியும்,
ஒருங்கே அமையப்பெற்று, உயரிட படக்
காட்சிக்கு உகந்த சிறந்த நாவல்.

விலை ரூ. 1/4. சந்தா நேயர்களுக்கு ரூ. 1.

முன்பணமனுப்பவும், வி. பி. கிடையாது.

## 6-வது அதிகாரம்

## கலங்கும் வானில் கல்மழை தோடக்கம்

சிவப்ரகாசம் நேரே தன் வீட்டிற்குச் சென்றான். அவன் மனம் இருக்கை கொள்ளாது தத்தளித்தது. கிருஷ்ணகுமாரியையும், அவளுடைய எழில் நிறைந்த குழந்தையையும் அவனால் மறக்கக் கூடவே இல்லை. அதே ஏக்கத்துடன் மிக்க விசனமடைந்து புரளுகிறான். கிருஷ்ண குமாரியை இனிமேல் தான் மனத்தினால் நினைப்பதுவும் தவறாதலாகும் என்ற உணர்ச்சியும் எண்ணமும் தோன்றாமலில்லை. அம்மாதிரியான பழய எண்ணத்தினால் அவளுக்கு ஏதேனும் சங்கடங்கள் நேர்ந்துவிடுமோ! ... ஆம் ... ஆம் ... கிட்டாதாயின் வெட்டென மற என்பதுபோல் இனி நாம் கிருஷ்ணாவை நினைப்பதா! சீச்சீ...இது மகா பிசகு, மிகவும் பயங்கரமும், ஆபத்துமானது'' என்றெல்லாம் பெருத்த யோசனையிலாழ்ந்து இரவைக் கழித்தான்.

தலைவலியும் சங்கடமும் தான் பட்டால்தானே தெரியும் என்ற பழமொழிப்படிக்கு, சிவப்ரகாசம் ஒரு காலத்தில் இம்மாதிரி வேதனைப்படுவதாகக் கதையில் படித்த போது மிக்க பரிகஸித்து ஒரு விதமான ஏளனச் சிரிப்புச் சிரித்ததை பின்னர் தனது அனுபவத்தில் இத்தகைய கஷ்டம் ஏற்பட்ட பிறகுதான் அதன் அருமை தெரிந்தது. அதையே பலகாலும் எண்ணுவான். மீண்டும் மீண்டும் படிப்பான். இந்நிலைமையில் சில தினங்கள் சென்றன.

கிருஷ்ணகுமாரி அவள் கணவன் வந்து கேட்ட உடனே தான் தம்பித்துவிட்டதை சிறிது நேரம் உணரவே இல்லை. பிறகே சற்று தெளிந்தவளாய் சமாளித்துக்கொண்டு அசட்டுச் சிரிப்பு வழிய ''இல்லை...ஒன்றும் இச்சைப்படவில்லை. என்னருமை வஸந்தகுமாரி செய்துள்ள சாமான்களை எல்லாம் பார்த்ததும் என்னை மீறிப் பழங்

காலத்துக் கதைகள் ஞாபகத்திற்கு வந்துவிட்டன. அந்த உணர்ச்சியைத் தாங்கமாட்டாது விலகி வந்து தூர நின்றேன்...எனக்கு ஒன்றும் வேண்டாம் ... வீட்டுக்குப் போகலாம் வாருங்கள்'' என்றாள்.

சாந்தமூர்த்தி ஏதும் குறுக்குக் கேள்வியோ, பதிலோ சொல்லவில்லை. மவுனமாகவே பின்னும் இரண்டு மூன்று கடைகளைப் பார்த்துக்கொண்டே சென்றான். அக்காலையில்தான் நாம் முன்பு கூறியபடி குலசேகரன் வஸந்தகுமாரியிடம் கூறிய விஷயங்கள் நடைபெற்றன. இந்த ஆத்திரத்தில் கிருஷ்ணகுமாரி "சரி... வாருங்கள்...நான் வீட்டுக்குப் போகவேண்டும். எனக்கு இங்கு நிற்க முடியவில்லை'' என்று சாந்தமூர்த்தியை அழைத்தாள்.

"ஏன் இதற்குள் போகவேண்டும்? இன்னும் பார்க்கவேண்டிய கடைகள் அனேகம் இருக்கின்றனவே, அவைகளைப் பார்த்துவிட்டுப் போகலாமே....சரி...உனக்குப் போகவேண்டுமாயின் போகலாம் வா'' என்று கிளம்பிவிட்டான். உடனே கிருஷ்ணகுமாரி தன் குழந்தைகளுடன் வீட்டிற்கு வந்துவிட்டாள். சாந்தமூர்த்தி அதற்கு மேல் கிருஷ்ணகுமாரியுடன் ஏதும் பேசவுமில்லை; வீட்டிலிருக்கவுமில்லை.

நாம் அவசரப்பட்டு ஆத்திரத்துடன் கேட்டுவிட்டால் பிறகு விகல்பம் ஒன்றுமில்லாது விஷயம் வேறு மாதிரியாக ஆய்விட்டால் அது விகாரமாய்ப் போவதுடன் அத்தனை பெரிய பாரிஸ்டர்மீது திடீரென்று குற்றம் சாட்டினால் அது ஒருகால் அபாண்டமாகிவிட்டால் கஷ்டம். நாம் பொறுமையை இழக்காமல் இன்னும் சில தினங்கள் கவனித்து வந்தால்தான் உண்மையை அறியக்கூடும். கோபம், பாபம் சண்டாளம் என்பதும், ஆத்திரம் அனர்த்தத்தில் முடியும் என்பதும் நினைக்கவேண்டும்'' என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

மீண்டும் இரண்டு மூன்று நாட்கள் சென்றன. இருவருடைய மனத்திலும் வெவ்வேறு எண்ணங்களும், உணர்ச்சிகளும் பாதித்து

அவரவர்களின் உள்ளுக்குள்ளேயே வேலை செய்கிறதேயன்றி வெளிக்கு ஒன்றும் புரியவில்லை. கிருஷ்ணகுமாரியைப் பார்க்கும் போது சாந்தமூர்த்தியின் மனத்தில் ஒருவிதமான சந்தேகமுண்டாகி அதன் ஜ்வாலை கண்களின் மூலம் வெளியாகின்றது. கிருஷ்ண குமாரிக்கோ சாந்தமூர்த்தியைப் பார்க்கும்போதெல்லாம் தான் ஏதோ ஒருவித குற்றம் செய்துவிட்டதுபோன்ற உணர்ச்சியும்... தான் இவனை ஏன் காதலித்து மணந்தோம், பெற்றோரையும்...மற்றோரையும் இழந்துவிட்டோமே...என்ற ஏக்கமும் ஒன்றுகூடி அதன் சாயை முகத்திலடிக்கிறது. இவ்வித நிலைமையுடன் இருவரும் இருக்கிறார்கள்.

கிருஷ்ணகுமாரி லேடீஸ் க்ளப்பில் ஓர் அங்கத்தினராதலால் அவள் அங்கு பந்தாடுவதற்குப் போவது வழக்கம். இவ்விரண்டு நாட்களாக மனம் சரியானபடி இல்லாததால் அவளுக்கு ஆட்டத்தின்மீதுகூட நாட்டம் செல்லவில்லை. இரண்டு தினங்கள் சென்றபின்னரே கிளப்புக்குச் சென்றாள்; அவளுடைய மனத்தில் சதா ஒரே ஒரு எண்ணந்தான் போராடிக்கொண்டிருந்தது, அதாவது தன்மீது கடும் ப்ரேமை கொண்டு, தன் வாழ்நாளையே பாழ் படுத்திக்கொள்ளும் நிலைமைக்கு வந்துவிட்ட ப்ரகாசத்திற்கு எப்படியாவது தன் சகோதரியையாவது கொடுத்து மணம் செய்வித்துவிட்டால் தன் மனம் சந்தோஷமடைந்துவிடும். அதை எப்படி யார் மூலமாகச் செய்யமுடியும்...பிதாவுக்கும் நமக்குந்தான் பரம விரோதம் உண்டாகிவிட்டதே என்ற குறையே அதிகமாகிவிட்டது.

அன்று க்ளப்புக்குப் பந்தாடச் சென்றாள். இவளுடைய பெண்குழந்தைக்கு வெகு அழகாக அலங்காரம் செய்து உடன் அழைத்துச் சென்றிருந்தாள். இவள் பந்தாடிக்கொண்டிருக்கையில் ப்ரகாச் கிளப்பின் வாசலில் வந்து "கிருஷ்ணகுமாரி இருக்கிறாளா"? என்று கேட்டான். வேலைக்காரப் பையன் இதை கிருஷ்ணகுமாரியிடம் தெரிவித்தான். உடனே கிருஷ்ணா வீதிக்கு வந்து "ஓ... ப்ரகாச் ... என்ன விசேஷம் ... சௌக்யமா ... இதுதான் எங்கள் மாதர்களின் சங்கம்" என்றாள்.

"ஓ...ரொம்ப சந்தோஷம்...நான் பீச்சுக்குப் போகப் புறப்பட்டேன். ஒரு வேளை நீ இங்கு இருக்கிறாயோ என்று பார்த்துவிட்டுக் குழந்தையை எடுத்துப்போகலாமென்று வந்தேன். அனுப்புகிறாயா? உங்கள் டென்னிஸ் விளையாட்டுக்கு நான் தடங்கலாயிருக்கிறேன்......

கிருஷ்:—அதெல்லாம் ஒன்றுமில்லை. குழந்தையை எடுத்துக்கொண்டு போங்கள். சீக்கிரமாக அழைத்துக்கொண்டு வந்துவிடுங்கள். அவா அப்பா வந்துவிட்டால் கஷ்டம்.

ப்ரகா.—ஓ...அப்படியானால் வீண் வார்த்தைகளுக்கு இடம் வேண்டாம். நான் இங்கேயே விளையாடிவிட்டுப் போகிறேன்—என்று கூறிக்கொண்டே குழந்தையைக் கொஞ்சிக் குலாவியவாறு சைகிலில் உட்கார வைத்துக்கொண்டு ஒரு ரவுண்டு சுற்றி வந்து மீண்டும் கிருஷ்ணகுமாரியிடம் கொண்டுவிட்டுச் சென்றான்.

இப்படியே க்ளப்பு நாட்களில் எல்லாம் ப்ரகாசம் வந்து சென்றுகொண்டிருந்ததை சாந்தமூர்த்தி வெகு கவனமாகப் பார்த்து வந்தான். அப்போதும் அவன் ஒன்றும் தன்னை மீறி ஆத்திரங் கொள்ளவில்லை. எனினும் அவனை மனப்பூர்வமாய்க் காதலித்த கிருஷ்ணகுமாரியை வருத்தவோ, இம்ஸிக்கவோ சந்தர்ப்பமும் மனமும் இடங்கொடுக்கவில்லை. தாயாரும் மாண்டாள்...தந்தையும் பெரும் பகையாளியாகிவிட்டார். உடன் பிறந்தவனோ கடும் வைரி. இந்நிலைமையில் அவளைக் கடிந்துகொண்டால் ஒருகால் உண்மையில் அவ் விருவருக்குள்ளும் வித்யாச எண்ணமிருக்குமாயின் அவனுடன் ஓடிவிட்டாலும் விடலாம்.

அந்தோ! அம்மாதிரி இச் சமயம் நடந்துவிடுமாயின் அதைவிட அவமானமும், ஏச்சும், பேச்சும், உலகமே கண்டு நகைக்கும் விதியும் அமைந்துவிடும். அல்லது ஒருகால் அவர்களிடம் விகற்பமான செய்கையோ, எண்ணமோ இல்லாதிருக்குமாயின் நான் கடிந்துகொள்வதைத் தாங்காது தற்கொலை புரிந்துகொண்டுவிட்டால்...ஆ...அதை நினைக்கும்போதே தேகம் நடுங்குகிறது. அம்

மாதிரி நேர்ந்துவிடுமாயின் தீராத அபக்யாதியும், பெரும் பழியும் கட்டாயம் சாரும்.

தகப்பன் வீட்டாருக்கும் நமக்குமுள்ள பகைமை ஊர்முற்று மறியும். இந்நிலைமையில் அவளை வேண்டுமென்றே கொன்றுவிட்ட தாக உலகமே தூற்றும் ...அப்பப்பா...இத்தகைய சங்கடத்திற்கு நாமாக ஏன் இடங்கொடுக்கவேண்டும்? அப்படி ஏதேனும் விகற்பம் நடந்துவிடுமாயின் அதோடு நாம் உலகத்தவர் முன்பு தலை காட்ட முடியாது. என்றுமழியாத இழிவு கவசத்தில்தான் நாம் மறைய நேரும். ஆகையால் நடக்கிறபடி நடக்கட்டும். கடவுள் விட்ட வழியாகட்டும். ஆத்திரப்பட்டுச் செய்து விடுவது சரியல்லவென்று தனக்குள் பலவிதமாக சிந்தித்துக்கொண்டே தன்னுடைய தனி அறையில் படுத்திருந்தான்.

கிருஷ்ணகுமாரி தன் கணவன் வழக்கம்போலில்லாது ஏதோ மாறுதலுடனிருப்பதை மட்டும் தெரிந்துகொண்டாள். ஆனால் அதைப்பற்றி என்ன ஏது என்று கேட்க மனந்துணியவில்லை. தான் ப்ரகாசத்துடன் பேசுவதும், அவன் குழந்தையுடன் விளையாடுவதும ஒருகால் தன் கணவனுக்குத் தெரிந்துவிட்டதோ என்றும் பயம் உண்டாகியது.

இவ்வித நிலைமையில் இருக்கையில் சங்கரனுக்கு கடுமையான சிக்கு வந்துவிட்டது. அவர்களுடைய க்ராமத்திற்கேசென்று நாட்டு வைத்தியம் பார்த்தால்தான் சரியான குணம் கிடைக்குமென்று டாக்டர்கள் கூறியதால் இவ்வூரைவிட்டு எல்லோரும் கிராமத்திற்கே சென்றுவிட்டார்கள். அந்தப் பிரிவினால் கிருஷ்ணகுமாரிக்கும் ப்ரகாசத்திற்கும் சந்திப்பே விட்டுவிட்டது.

சுமார் மூன்று மாத காலம் மிகவும் கஷ்டப்பட்டுப் பிறகு பலனில்லாது சங்கரன் உலகை நீத்தார். அவருடைய சகதர்மிணியான மகா உத்தமியும் யாரும் எதிர்பாரா விதம், சங்கரனின் கிரியைகள் முடிவடைவதற்குள் காலரா கண்டு ஒரு நிமிடத்தில் இறந்தாள். இரண்டுபேரும் மலை மலையாக இறந்துவிட்ட துக்கம் விசாரிக்க

திருவேங்கடத்தின் கல்லினுங் கொடிய மனம் இசையவில்லை எட்டிப் பார்க்காமலிருந்துவிட்டான்.

சங்கரன் இறக்குமுன், தன்னுடைய ஸ்தானத்திற்கு தன் மகனையே நின்று வெற்றி பெற்று பொது ஜன ஊழியம் செய்து இன்புறுமாறு கூறிச்சென்ற செய்தி குலசேகரனுக்கும் திருவேங்கடத்திற்கும் தீராத ஆத்திரத்தையும் பகையையும் மூட்டிவிட்டது. அதனல் எட்டியும் பார்க்கவில்லை. சாந்தமூர்த்தி மட்டும் சாவுக் கடிதம் அனுப்பிவிட்டான். பெற்றோர்கள் ஏக காலத்தில் மறைந்து விட்ட துயரம் சாந்தமூர்த்தியை மிகவும் பாதித்துவிட்டது. இனி என்ன செய்ய முடியும்?

மேற்குறித்த சம்பவங்கள் நிகழ்ந்து ஒரு மாதங் கழித்து ஊருக்கு வந்து சேர்ந்தான். உடனே (பை—எலெக்ஷன்) தேர்தல் ஆரம்பமாகிவிட்டது. திருவேங்கடம் அதே தேர்தலுக்கு எத்தனை ஆயிரம் ரூபாய்கள் செலவழிந்தாலும் பாதகமில்லை. தன் மகன் குலசேகரனை நிறுத்தி ஜெயிப்பதென்று முடிவு செய்து நிற்க வைத்து விட்டார்.

வஸந்தகுமாரி இந்த தேர்தலால் இன்னும் என்ன அனர்த்தம் விளையுமோ தெரியவில்லையே......இதில் நிற்காமல் மவுனமா யிருக்கலாகாதாவென்று தன் தந்தையிடமும் அண்ணனிடமும் கூறியது முற்றும் வீணாகிவிட்டது. "நாங்கள் ஒரு கை பார்க்காமல் அந்த சோதாப்பயலை, குடிகாரனை அவமானப்படுத்திப் படு குழியில் தள்ளிவிடாமல் இருக்கப்போவதில்லை. இதனல் யார் யாருக்கு என்ன மனஸ்தாபமாயினும் சரி...யார் யார் இறந்தாலும் சரி. எத்தனை பொருள் போயினும் சரி" என்ற உறுதியில் கங்கணங் கட்டிக்கொண்டதோடு அவனுக்கு ஓட்டு வராமல் பிரித்துவிட வேண்டுமென்ற உத்தேசத்துடன் ப்ரகாசத்தையும் தூண்டிவிட்டுத் தனக்கு ஆகவில்லை என்றாலும் அவனுக்காவது ஆகட்டும் என்ற நிலைமையில் சூழ்ச்சி செய்து அவனையும் தொந்தரவு செய்தார்கள்.

சிவப்ரகாசத்திற்கு நிற்க ப்ரியமில்லை எனினும் அவன் குலசேகரனின் சொல்லையும், திருவேங்கடத்தின் சொல்லையும் தட்ட

முடியாது ஒப்புக்கொண்டான். தமக்கும் அவனுக்கும் சம்மந்தம் இல்லாததுபோல் நடிக்கவும் தொடங்கிவிட்டார்கள். தேர்தல் முழக்கம் ப்ரமாதமாக எழுந்துவிட்டது

ஒரு தினம் மாலே 5 மணிக்கு குலசேகரன் வீட்டில் சில காலி களுக்கு தடபுடலான சாப்பாடும், குடியும், அமர்க்களமும் நடந் தன. அவர்களுக்கு புதிது புதிதான ஒரு ஜோடி உடைகள் நாகரிக முறையில் சன்மானமாக வழங்கியதோடு தலைக்கு 50 ரூபாய் 100 ரூபாய் நோட்டுக்களாக கையில் எண்ணிவிட்டு "தோழர்களே! இதை வைத்துக்கொள்ளுங்கள். இந்த தேர்தலில் கட்டாயம் உங்க ளுடைய முயற்சியால் ஜெயம் நிச்சயம் என்ற தைரியம் எனக்கு உண்டு. நீங்கள் எதற்கும், யார் மிரட்டலுக்கும் பயப்படவேண்டாம். எங்கெந்த வழியில் எப்படி எப்படி வேலை செய்யவேண்டுமோ அப்படி தாராளமாகச் செய்துவிடுங்கள்.

அவனைச் சேர்ந்த வேலைக்காரர்களைக் கண்டவிடத்தில் உதைத்து, கை கால்களையும் உடைத்துவிடுங்கள். நோடீஸ்களைப் பிடுங்கி எறிந்துவிடுங்கள். எல்லாவற்றிற்கும் செலவுக்குச் சற்றும் பயப்படவேண்டாம். ஓட்டர்களை பயமுறுத்தி வையுங்கள். நகரசபை பள்ளிக்கூடத்து வாத்தியார்களை எல்லாம் கடி பிடி செய்து வேலை செய்யச்சொல்லுங்கள். இல்லாவிட்டால் அவர்கள் வேலைக்கு ஆபத்து வந்துவிடுமென்று திட்டமாய்க் கூறுங்கள்...ஊம் ...தெரிந்ததா?'' என்முன்.

இந்த கொடிய பயங்கரமான வார்த்தைகளை உள்ளிருந்தபடியே கேட்டுக்கொண்டிருந்த வஸந்தகுமாரியின் உள்ளம் பதைபதைக் கிறது. அந்த காலிகள்...தடபுடலாக மார் தட்டிக்கொண்டு "எசமான்!...நீங்க ரவகூட பயப்படவாணும்...பெரிய அய்யாவுக்கு வந்த அவமானம் இதுலே மறஞ்சிபூடவாணுமா! நாங்க செய்யப் போர வெலெயெ பாருங்களே...சீக்கிரத்திலேயே அந்த மனுசனையே காலெ ஒடிச்சிப்புட்ரம்...அத்தோடே வாபீஸ் வாங்கிகினு ஓடிபூட மாட்டானு?'' என்று கூறும் வார்த்தைகள் பின்னும் அதிகரித்த வேதனையையும், திகிலேயும் வஸந்தகுமாரிக்குக் கொடுத்துவிட்டன... "ஐயோ! கடவுளே...விநாச காலே விபரீத புத்தி என்பதுபோல் இது ஏதோ நாசத்திற்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்வது?'' என்று கதி கலங்கிப்போய் இடிந்துவிட்டாள்.

---

## 7-வது அதிகாரம்

### கோபத்திற்கு முன் பாபமு முண்டோ?

வஸந்தகுமாரிக்கு எத்தனை வித பயங்களும், வேதனைகளும் உண்டாயிற்றோ அதேபோல் கிருஷ்ண குமாரிக்கும் மனத்தவிப்பும், சங்கடமும் உண்டாகி விட்டன. தன் அண்ணனும் ப்ரகாசமும் போட்டியிடுவதை அறிந்ததும் இன்னும் பெரிய விபரீதம்தான் நடக்கபோகிறது என்ற திகிலும், பீதியும் உண்டாகி நிமிடத்துக்கு நிமிடம் வதைக்கவாரம்பித்து விட்டது. தன் கணவன் நிற்காமல் விட்டுக் கொடுத்துவிடக் கூடாதா என்றும் நினைக்கத் தொடங்கினாள்.

தன் கணவனை நோக்கி "நாதா! என்மீது கோபித்துக் கொள்ள வேண்டாம். சென்ற தேர்தலில் தோன்றியதை விட இம்முறை அதிகமான ஆபத்தும், பயங்கரமும் உண்டாகுமென்று தோன்றி என்னை வதைக்கின்றது. முன்போல் எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்ள அப்பாவோ, அம்மாவோ இல்லை. நாமோ சிறியவர்கள். என் தமையனுக்குள்ள ஆத்திரத்தில் என்னென்ன செய்துவிடுவானோ என்று என்னிதயம் நடுங்குகிறது. இந்த ஆபத்தை வேண்டுமென்று விலைக்கு வாங்கிக் கொள்வானேன்.........இன்னும் இரண்டு நாட்கள்தானே நாமினேஷனுக்கு இருக்கிறது. அதற்குள் நீங்கள் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு இந்த சனியனிலிருந்து விலகிக் கொள்ளலாகாதா!'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

அதே சமயத்தில் அங்கு வஸந்தகுமாரி, தன் அண்ணனும் மற்றையோரும் பேசும் விஷயத்தைக் கேட்டுக் கதிகலங்கி பதறிப்போய், ஓட்டமாக அக்கூட்டத்தின் முன்பு ஓடி வந்து குலசேகரனின் காலைப் பிடித்துக் கொண்டு "ஆ......அண்ணா! அண்ணா!

உனக்கேன் இப்படிப் பட்ட விபரீத புத்தி உண்டாகிறது. ஆனை வரும் பின்னே! மணி ஓசை வரும் முன்னே! என்பது போல் உனக்குப் பின்னல் ஏதோ பெருத்த ஆபத்தும், அபக்யாதியும் உண்டாவதற்காகவா இக்காலிக் கூட்டங்களைக் கூட்டி வைத்துக் கொண்டு கள்ளும் சாராயமும் பகிரங்கமாக வார்த்து லஞ்சத்தைக் கொடுத்துத் தலைகால் தெரியாது கூத்தாடுகிறாய்?......

ஐயோ! வேண்டாம்......வேண்டாம்......எத்தனையோ வருஷமாக மிராசு போல் வகித்து வந்த தந்தையின் கதியே இப்படியாகி விட்ட தென்றால் உன் கதி என்னவாகுமோ......நீ சற்று விட்டுக் கொடுத்து விலகிக் கொள்ளக் கூடாதா...ப்ரகாசத்தையும் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கிறாய்....ஐயா! நீங்கள் நன்மைக்கு உழைத்து நலம் பெறக்கூடாதா?......

என்று ஆவேசமும் துக்கமும் கூடிய த்வனியுடன் கூறி முடிக்கு முன் குலசேகரன் தன் பொறுமையை இழந்து, கொடிய சர்ப்பத்தினுங் கொடிய சீற்றத்தையடைந்து வஸந்தகுமாரியின் கையைப் பிடித்துத் தடதடவென்று இழுத்துக் கொண்டு போய் "சீச்சீ! கழுதை!. நீ உலக நீதியை தலைகீழாக அறிந்தவள். மூஞ்சியைப் பார்......அதிகப்ரசங்கி! போ......விலகிப்போ......என்று கூறித் தடாரென்று தள்ளிவிட்டான்.

இதைக் கண்ட அக்காலிக் கூட்டங்கள் கடகடவென்று பெரிதாக நகைத்துக்கொண்டே......ஹா......இதுக் கென்ன தெரியும் சின்ன கொழந்தை......அந்த மொட்டைப் பயலையா வுட்டுடுவாங்க? ......சக்கயா சாறு பிழிந்து; ஓட்டிட வாணும்மா?......என்றார்கள். இதைக் கேட்ட வஸந்தகுமாரி "அடா பாவிகளே!......சத்சங்கமும் சத் சகவாஸமும் இருந்தாலல்லவா நல்ல எண்ணங்களும் நல்ல காரியங்களும் நடக்கும்! உங்களைப் போன்ற சோதாக்களால் தீமையும் அனர்த்தமும் அல்லவா விளையும் ... காலிக் கூட்டங்களாகிய உங்களுக்கு கலகம் செய்து, த்வேஷத்தை மூட்டுவதுதான் சத் காரியமாகும்......

இதற்குள் குலசேகரன் ஓட்டமாக ஓடிவந்து "வஸந்தவல்லி இருக்கும் இடத்துக்கும் இவர்கள் இருக்கும் இடத்திற்கும் மத்தியி லுள்ள கதவை சாத்திப் போட்டுவிட்டான்.

அதே சமயம் இங்கு சாந்தமூர்த்தியை கிருஷ்ணகுமாரி கேட்டதற்கு சாந்தமூர்த்தி தன் சாந்தத்தை இழக்காமல் ஒருவித மாக நகைத்துக் கொண்டு "கிருஷ்ணு! வந்த மனஸ்தாபம் வந்தா யிற்று. இனிமேல் புதிதாக வரப்போவது ஒன்றுமில்லை. என் பிதா இறக்குங்காலத்தில் அவர் கூறிய வார்த்தைக்கு நன்மதிப்பு கொடுத்து நடக்கக் கடமைப் பட்டிருக்கிறேனே யன்றி பின்தங்கி பயந்து ஓட நான் தயாராக இல்லை. தந்தைக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றியே தீருவேன். கடவுள் ஒருவரிருக்கிறார். அவருடைய ஆக்கினைக்கு அன்னிதாக எதுவுமே நடக்காது. இது மட்டும் ஞாப கத்திலிருக்கட்டும். எனக்கு இந்த தேர்தலினால் விபத்து உண்டாக வேண்டு மென்றிருந்தால் நானில்லை; நீ இல்லை. மற்ற யார்தான் வந்து தடுத்தாலும் தடுக்க முடியுமா! இதெல்லாம் வீணான பயித்தி யக்காரத்தனம்! இவ்விஷயத்தில் நீ ஏதும் தடை செய்யாதே...... நடக்கிறபடி நடக்கட்டும்...கிருஷ்ணு......இன்னும்......யாரோ ஒரு பாரிஸ்டர் சிவப்ரகாசமாம்......அவரும் இந்த வீட்டுக்கு நிற்கப் போகிறாராம். அவர் யாரோ தெரியவில்லை." என்று ஒருவிதமாகப் பார்த்துக் கொண்டே கூறினான்.

கிருஷ்ணகுமாரி சற்று திகைத்தவளாய் "என்ன...என்ன!... சிவப்ரகாசமும் இதற்குப் போட்டி போடுகிறாரா? ... இது உண்மை தானா......உங்களுக்கு யார் சொல்லியது?......என்று சுற்று பட படத்தபடியே கேட்டாள்.

சாந்த:—ஏது......உனக்கு அவரைத் தெரியும்போல் பேசுகி றாயே......அவர் உனக்கு எப்படித் தெரியும்...உங்கள் பந்துவா... இதோ பத்திரிகையைப் பாரு. அவருடைய படமும் விஷயமும்... என்று கூறிப் பத்திரிகையைக் காட்டினான்.

கிருஷ்ணகுமாரிக்குச் சில வினாடிகள் பெரும் குழப்பமும் கலவரமும் உண்டாகி விட்டன. "அவசரப்பட்டுக் கூறிவிட்

டோமே ... இப்போது எப்படி சமாளிப்பது? என்று சற்று திகைத்தாள். இதற்குள் கிருஷ்ணகுமாரியின் பெண் குழந்தை ப்ரகாசத்தின் புகைப்படத்தைப் பார்த்ததும் "அம்மா ... அம்மா ... சைகில் மாமா படம்......சைகில் மாமா......அதோ இக்கா......அப்பா! ... அப்பா......இதோ பாரு சைகில் மாமா. இவர் எனக்கு பச்சணம், பிஸ்கோத்து......சொக்கா......என்னெல்லாமோ வாங்கி குடுப்பா......என்னெ சைகில்லே வச்சுண்டு சுத்துவாப்பா......அம் மாக்கூட தெரியும்......என்று கள்ளங்கபடமற்றுக் குழந்தைத் தனத்துடன் கூறியது.

இதற்கு மேலும் கிருஷ்ணகுமாரி என்ன செய்வாள் பாவம்! ஒருவாறு பார்த்துக் கொண்டே......"இவரை உங்களுக்குத் தெரியாதா என்ன?......இவர் என் தகப்பனாரின் தூரத்து பந்து. இவர் தான் எங்கள் மூன்று பேருக்கும் கொஞ்ச காலம் ப்ரைவேட்டு சொல்லிக் கொடுத்தார். பிறகு சீமைக்குப் போய்விட்டார். வெகு நாட்கள் சென்று தான் திரும்பி வந்தாராம்.........குழந்தையைப் பார்த்தார் ஒரு தினம்......எங்களிடம் அவருக்கு அதிக ப்ரீதி. அதனால் குழந்தையை எடுத்துக் கொஞ்சினார், என் தங்கை வஸந்த குமாரியை அவருக்குக் கொடுத்து விவாகம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் என் தாயாருக்கு உண்டு. இப்போதும் அப்படியே நடக்கும் போலிருக்கு......

சாந்த:—அப்படியா......உன்னோடு கண்காட்சியில் பேசிக் கொண்டிருந்தாரே அவர்தானா பாரிஸ்டர்...உன்னை விட உன் தங்கைக்கு நல்ல அதிர்ஷ்டந்தான். உன் தங்கையின் புருஷன் பாரிஸ்டர் என்றால் உனக்கு எத்தனையோ பெருமை...உன் தங்கைக்கோ உன்னைப் பார்த்தால் பெருமையே இல்லை......உன் தங்கையின் புருஷனுக்குச் சரியாக நான் போட்டிப் போடுவதைப் பற்றி வருந்துகிறாயா?

கிருஷ்ணகுமாரியின் முகம் சற்று மாறியது. தன்னையவன் காதலித்த விஷயமோ அதனால் ஒண்டியாக விருக்கும் விஷயமோ கூறத்துணியவில்லை. அவளுடைய இதயத்தில் ஏதோ ஒரு விதமான வேதனை மட்டும் சூழ்ந்து கொண்டது. தங்கள் அந்தரங்க ரகஸ்

யத்தை எப்படியோ தெரிந்து கொண்டு தான் பேசுவதாய் அவள் மனத்தில் தோன்றி விட்டது. என்ன பதில் சொல்வ தென்பதும் தோன்ற வில்லை ... சில விஞடிகள் சென்ற பின்னர் ... நீங்கள் பேசுவதைப் பார்த்தால் அவர்மீது ஏதோ சந்தேகமோ ... தப்பபிப் ராயமோ கொண்டிருப்பதாக வன்ரோ தெரிகிறது. அவர் அப் படிப் பட்ட ...

இதற்குள் சாந்தமூர்த்தி இடைமறுத்து "கிருஷ்ணு! நிறுத்து. ... போதும் உலகானுபவத்தை யறியாத முட்டாளல்ல நான்...... அவர்மீதும் ... உன் மீதும் சந்தேகமோ பழியோ சுமத்துவதாக இருந்தால் நீ இம்மட்டும் இந்த நிலைமையில் இருக்கவே மாட்டாய். உனது புகைப்படத்தை அந்த பாரிஸ்டரிடம் நான் பார்த்த அப் போதே ... நீயும் அவரும் கண்காட்சியில் அன்யோன்யமாகப் பேசிய அந்நிமிடமே ... மாதர் சங்கத்தில் நீங்கள் சந்தித்துக் குழந் தையுடன் அவர் குலாவும் அக்கணமே ... நான் ஆத்திரக்காரனுக இருப்பின் எத்தனையோ அனர்த்தம் செய்திருக்கலாம்.

கிருஷ்ணகுமாரீ! நானும் ஏதோ கொஞ்சம் படித்த அறிவும், அனுபவத்தின் அறிவும் பெற்ற மனிதன்தான் ... மிருகமல்ல ... உனது ஜீவிய ரகஸ்யத்தை நான் அறிவேன். அந்த மனிதன் உன் னையே நேசித்ததும் இப்போதும் அதே ஏக்கத்தினுல் வருந்துவதும் நான் தக்க மனிதர்கள் மூலம் அறிந்து கொண்டேன். அவன் மீது குற்றமில்லை. குற்றம் என்மீதுதான். நானல்லவோ தடையாயும், தீர விசாரியாமல் உன்னை மணந்து முட்டுக் கட்டையாயும் ஆய் விட்டேன்.

நீ இனி எத்தனையோ பத்தை கட்டிப் பேசப் பார்க்கலாம். உபயோக மில்லை. நான் ஜீவரக்ஷக சங்கத்தின் காரியதரிசியாய் இத்தனை வருடங்கள் இருப்பதனுல் என் மனம் அஹிம்சைக்குத் துணிய வில்லை. உன்னிலைமையையும் என்னிலைமையையும் உத்தே சித்து நான் சகலத்தையும் பொறுமையுடன் சமாளித்து வருகிறேன். நீ வீண் பூச்சு பூசாதே ... உனக்கு இஷ்டமாயின் உன் தகப்பனுரி டம் போய்விடு. ஆனுல் என் குழந்தைகளை நான் விடமாட்டேன்.

எப்படியோ வளர்க்க எனக்குத் தெரியும். நீ மரியாதையாயும் மான மாயும், உள்ளே பதினையிரம் இருப்பினும் பூடகமாக வாழ ப்ரியப் பட்டால் இங்கு இரு. வீண் வார்த்தைகள் வேண்டாம். என் பிதாவின் வாக்கை நான் பரிபாலித்தே தீருவேன். அவரவர்களின் ஜீவியத்தின் ரகஸ்யத்தை அவரவர்களின் ஹ்ருதயமே அறியும். இதற்குமேல் ஆதி கதைகளை ஞாபக மூட்டவேண்டாம்... என்று கூறிக்கொண்டே போய் விட்டான்.

சாந்தமூர்த்தியின் ஒவ்வொரு வார்த்தையும் ஆணி பொத்துவது போல் இவள் மனத்தில் பொத்தியது. இத்தனை விஷயங்களையும் அவன் எப்படியோ தெரிந்துவைத்துக் கொண்டிருப்பதையறிந்த கிருஷ்ணகுமாரியின் மனம் ஆச்சரியத்தினுலும் பயங்கரத்தினுலும் அலேந்தது. சாந்தமூர்த்தியின் பொறுமையைக் கண்டும் வியக்காமலிருக்க முடியவில்லை......இந்த ரகஸ்யங்களை அறிந்ததனுல் தான் தன்னிடம் பழய மாதிரி இல்லாது ஏதோ ஒருவித மாறுதலுடன் இருக்கிறுர் என்பதை இப்போதே உணர்ந்தாள்.

அதற்குமேல் அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தான் செய்தது முற்றும் குற்றந்தான் என்று தன் மனத்திற்குள் ஏதோ ஒன்று சொல்வதுபோல் இருக்கிறது. இப்போதுள்ள மனக் குழப்பமோ...சொல்ல முடியாது...தன் மரியாதையைத் தானே குறைத்துக் கொண்டதால் இனி புருஷனின் மனதை மாற்றவும் சாயவில்லை. தமயனேடு பேசியோ வருடக் கணக்காகிவிட்டது. ப்ரகாசத்தைப் பற்றி இனி நினைக்கவே கூடாது ... ஹா...மூன்றும் மூன்றுவிதமாகி விட்டதே......என்ன செய்வேன்.........என்ன ஆபத்து நேருமோ?''......என்று கதிகலங்கிக் குழம்பிப்போய் விட்டாள்.

அதே சமயம் அங்கு வஸந்தகுமாரியைத் தனியே தள்ளி விட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு சென்ற குலசேகரன் அந்த காலிகளுடன் குசாலாகப் பேசியும் உத்ஸாக மூட்டியும் கும்மாள மடிக்கிருன்.

உள்ளே தள்ளப்பட்ட வஸந்தகுமாரிக்கு இச் சொற்கள் காதில் விழாமலில்லே. நெருப்புத்தணல் மேலே விழுவதுபோல் இருக்கிறது. தத்தளித்தபடியே எழுந்து கதவருகில் வந்து நின்றாள். மீண்டும் உள்ளே ஓடினாள். பித்துப் பிடித்தவளேப்போல் அலற்றியவாறு தகப்பனாரிடம் ஓடி வந்தாள்.

அப்போது தகப்பனார் தன் போக்காக உலாவிய படியே... "பதினாயிரமில்லே. இருபதினாயிரமில்லே. ஐம்பதினாயிரம்தான் ஆனாலும் சரி......இழந்த மானத்தை, இழந்த கவுரவத்தை மீண்டும் பெற்றே தீருவேன்......... சோதாப்பயல்......... மொட்டைப் பயல்...... கிழவன்தான் துலேந்தான். அதோடு என் காலில் வந்து சரணாகதி பண்ணி நாய்போலக் கிடக்காமல் இந்த எலியா...சுண்டெலியா, புலியாகிய குலசேகரனே எதிர்க்கிறது... ஊஹூம்...விட்டுக் கொடுப்பதாவது"... என்று பேசிக் கொண்டே உலாவி வருவதைப் பார்க்கும்போதே பயம் பிடித்துக் கொண்டது. இச்சமயம் நாம் எதிரில் சென்று பேசினால் இன்னும் என்ன அனர்த்தம் விளேயுமோ வென்று பயந்த படியே திரும்பிவிட்டாள்.

அன்று முற்றும் அவளுடைய மனம் கட்டுக்கடங்காது தவித்தது. என்னதான் செய்ய முடியும் பாவம்! தன் பிதாவுக்குத் தெரியாமல் கிருஷ்ணகுமாரியைக் கண்டு அவள் புருஷனே நிற்க விடாது தடுத்து விடும்படிக் கூறலாமாவென்றும் எண்ணினாள். உடனே, தன் தாயார் இறந்திருந்த தறுவாயில் அவர்களேத் தன் பிதா செய்த அவமானமும் அலக்ஷியமும் நினேவிற்கு வந்து விட்டன. ஏற்கெனவே குடிகாரன், சோதா, குறி கெட்டவன் என்று கூறுகிறார்களே இந்த ஆத்திரங்களேக் கொண்டு அவமானப் படுத்திவிட்டால் என்ன செய்வது? அது பிறகு வெகு விபரீதமாகிவிடுமே என்ற குழப்பமும் பயமும் உண்டாகிவிட்டதால் அவ்விதமும் செய்ய முடியவில்லே. கடவுள் விட்ட வழி என்று தத்தளித்தபடியே கல்லாய்ச் சமைந்துவிட்டாள்.

## 8 -வது அதிகாரம்

### பயங்கரச் செயலில் பதறிய இதயம்

தேர்தல் முழக்கம் எங்கு பார்த்தாலும் தடபுடல் படுகிறது. நோட்டீஸ்களும் கட்டுக் கட்டாய் அவரவர்களின் அபிமானத்தைக் குறித்தும், தாம் தாம் செய்யப்போகும் காரியங்களைக் குறித்தும் புத்தகங்கள் போன்று பக்கம் பக்கமாகப் பறக்கின்றன. பொது மக்களும் தங்கள் கடமையைச் செய்யாமலில்லை. "ஏன் சார்! எலெக்ஷன் எப்படி...... யாருக்கு ஜெயமாகும்போல் இருக்கிறது?'' என்று ஒருவர் மற்றவரைக் கேட்டார்.

மற்றவர்:—சென்ற முறையைப்போல் இல்லை சார்! இம்முறை சொல்வதற்கு மிகவும் சந்தேகமாயிருக்கிறது. சாந்தமூர்த்தியோ தன் பெயருக்குத் தகுந்தாற்போல் சாந்தமாகவே இருக்கிறான். இப்படி இருந்தால் காரியமாகுமோ? அவர்கள் கோஷ்டி என்னவோ நோட்டு நோட்டாகப் பறக்க விட்டு ஓட்டு ஓட்டாக சேர்த்துவிடப் போகிறார்களாம். சாந்தமூர்த்திக்கு அதிகமாக பணம் இல்லை. சங்கரனைப்போல் செல்வாக்கு மட்டும் இருக்கிறது. அது போதுமா......

முதல்வர்:—போமய்யா! ஏதோ கோமுட்டி சாக்ஷிபோல் கதை சொல்கிறீர். நிச்சயமாய் சொல்லும். நீர் யாருக்கு ஓட்டு செய்வீர்?

மற்றவர்:—இப்போ ஒன்றும் சொல்லமுடியாது சார்! போகப் போகத்தான் தெரியும்—என்று பேசிக்கொண்டே இருவரும் செல்கையில் ஒரு தெருவின் கோடி மூலையில் ஒரு கிழவி, லபோ திபோவென்று அடித்துக் கொண்டு அழுகிறாள். கூட்டம் ஏராளமாகச் சூழ்ந்து கொண்டிருந்தது, "ஐயோ! அந்த படுபாவி......சண்டா

ளன். நாசகாலனின் மோச வலையில் சிக்கி ஆசைக் கயிற்றில் பிணைக் கப் பட்டு என்னை மோசம் செய்து விட்டுப் போய்விட்டாளே!'' என்று அலறுகிறாள்.

அருகிலிருந்தவர்கள் "ஏம்மா! என்ன நடந்தது. யாருக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது?'' என்றார்கள். அந்தக் கிழவி அலறிக்கொண்டே, "ஐயா! இனிமேல் எனக்கு வெக்கமென்ன மானமென்ன. வயித்தெரிச்சலுக்கு முன்னே எதுவும் தோணலெ சாமி......இவ எம்மவ......இவ புருஷன் பினங்கு சிங்கப்பூருக்கு ஓடிப் பூட்டான். இவ ஒரு பள்ளிக்கூடத்திலே வேலெ சேஞ்சிக் கினு இருந்தா! அந்த பாடெலெவைப்பான்...அவன் நாசமாப் பூட. அந்த சாந்தமூர்த்தி வந்து அவளைப் பார்த்து "நீ ஏன் கஷ்டப் பட்றெ...கஷ்டப்படாதே. நான் உன்னைக் காப்பாத்தறேன். ரிஜிஸ்த் தரு கண்ணாலமாமே. அது கூட செஞ்சிக்சரேன்னு சொல்லி பள்ளிக் கூடத்தெ நிறுத்திப்போட்டான்.

ஒரு வருச காலமா, மாசம் 20, 30......பணங் குடுத்து வந் தான் "இப்படி ஏமாத்தினியானா இன்னம் எத்தினி நாளைக்கு இப் படி கஷ்டப் பட்ரது. என்னமோ கல்யாணம்னு சொன்னியே அதெ செய்யக்கூடாதா! எனக்கு 5 மாசம் ஆய் பூட்டதென்னு சொன்னா......அந்தப் பாவி அதற்கப்புறம் கண்ணாலே கூடத் திரும் பிப் பாக்கலெ. எம்மவ ஏதேதோ மருந்துங்கள்ளாம் துண்ணாட் டத்திலே சன்னி கண்டு செத்துட்டாய்யா! எம் வயிறு பத்திக் கிது என்ன செய்வேன்?'' என்று கத்தினாள்.

இதைக் கேட்ட சிலர் "என்ன! அந்தப் பாவியா அப்படிச் செய்தான்? அட அக்ரமமே......அட அனியாயமே......இப்படி ஒரு குடும்பத்தைக் கெடுத்த பாவியா பரம யோக்யன் போல் ஓட்டு கேட்க வெட்கமில்லாமே வந்துட்டான். அட எழவே......இந்தக் கிழவியின் வயிற்றெரிச்சல் விடுமா...வீண் போகுமா....எம் பாட்டி நீ ஏன் அவன்மேலே நடவடிக்கை எடுக்கக்கூடாது?'' என்றான்.

கிழவி அழுதபடியே "ஐயோ! சாமீ! நான் எப்படி இனிமே என்ன சொல்ல முடியும். அவ உசிரோடே இருக்கச்சயே செய்யப்

பாத்தாள். இதுக்கு சாக்ஷி ஏது சம்மன் ஏது. இது நியாயத் துக்கு வராதுன்னு சொல்லிட்டப் பிறவல்ல அவ கதி இப்பிடியாச்சி. ஓலகத்திலே நீதி இல்லே. நியாயம் இல்லே. தர்மம் இல்லெ. எல் லாஞ் செத்து பூட்டுது.'' என்று கதறினாள். "எது உண்மையோ! எது நியாயமோ! யார் கண்டது. பகவானுக்கே வெளிச்சம்'' என்ற கோஷ்டியினரும் சிலர் இல்லாமலில்லே.

நல்ல விஷயத்தை விட தீய விஷயமே கொடிய காற்றுப் போலும், காட்டுத் தீயைப்போலும் பறந்து விட்டது. இதையே எதிர்க்கக்ஷிக்காரர்கள் வீடு வீடாகக் கூறி ப்ரசாரம் செய்யவும் தொடங்கி, "இத்தகைய சண்டாளனுக்கு ஓட்டுக் கொடுத்தால் உங்க ளுக்கு ஒருவிதமான நன்மையும் ஏற்படாது. அவன் குடியன், வெறியன், சோதா''......என்று இதுபோன்ற பலவிதமான வார்த் தைகளைக் கூறி வந்தார்கள்.

சாந்தமூர்த்தியின் செவியில் அக்ரமமாகக் கூறும் அவ்வார்த் தைகள் விழுந்த உடனே பதறினான். இது முற்றும் எலெக்ஷனில் எதிரிகள் செய்யும் கட்டுப்பாடான சூழ்ச்சிதான் என்றதை அவன் மனமும் நன்கறிந்தது. அவனுடைய நேயர்களும் இந்த சூழ்ச்சியை அறிந்து அவனைத் தேற்றினார்கள். சாந்தமூர்த்தியும் அவன் நண் பர்களும் அந்த கிழவியையே தேடிக் கொண்டு விசாரிக்கச் சென்ற போது கிழவி சவத்தை அடக்கம் செய்துவிட்டு துக்கத்தினால் எங் கேயோ ஓடிவிட்டதாகவும், அந்தக்கிழவியும் மகளும் இந்த இடத் திற்கு சென்ற சில தினங்களுக்கு முன்புதான் குடி வந்ததாயும் அதனால் அவர்களைப் பற்றிய தகவல் ஒன்றுமே தெரியாதென்றும் அங்கிருந்தவர்கள் கூறிவிட்டார்கள்.

இதிலிருந்தே இம்மாதிரி செய்தது தேர்தல் தந்திரத்தில் இது வும் ஒன்று என்று நன்றாகத் தெரிந்து விட்டது. இந்த அக்கிரம மான விஷயத்தையே வைத்துக் கொண்டு அவர்கள் ப்ரசாரம் செய் யும் கொடுமை மட்டும் சகிக்கவில்லை. என்ன செய்வது? எப்படியும் கடவுள் கிருபை இருக்கும் பக்ஷத்தில் ஜெயமும் நிழல்போலக்

கூடவே இருக்கும் என்ற நம்பிக்கையுடன் வேலை செய்து வந்தான்.

ஒரு தினம் பட்டப் பகல் 12 மணிக்கு சுமார் 50 பேர்கள் அடங்கிய ஏழைகளின் கூட்டங்கள் சாந்தமூர்த்தியின் வீட்டு வாசலில் வந்து "எஜமானே! நீங்க நல்லா இருக்கணும். ஒங்க கொயந்த குட்டிங்கல்லாம் நல்லா இருக்கணும். ஏயெங்களுக்கு சாதம் போடும் புண்ணியவாங்க கூட இக்கலி காலத்துலே இருக்கிறுங்கண்ணு நீங்கள் தான் சாமீ!......என்று பெரிய சப்தமிட்டுப் பேசினர்கள்.

சாந்தமூர்த்தி தனியாக அறையில் உட்கார்ந்திருந்தான். கிருஷ்னகுமாரிக்குள்ள வேதனையைக் கூறிமுடியாது. இப்படியும் கூறமுடியவில்லை; அப்படியும் சொல்ல முடியவில்லை. பாக்குவெட்டி மத்தியில் அகப்பட்டது போல் தத்தளிக்கிருள். இந்த வேதனையில் மனம் நொந்துப்போய் தேகம் மெலியவும் ஆரம்பித்து விட்டது. இன்னிலைமையில் அவள் இக்கூட்டத்தையும் கூச்சலையுங் கேட்டவுடன் திடுக்கிட்டவளாய் வீதியில் வந்து பார்த்தாள்.

ஏகப்பட்ட பிச்சைக்காரக் கூட்டங்கள் இருப்பதைப் பார்த்ததும் வியப்பும், வெறுப்பும் கொண்டவளாய் "நீங்கள் எல்லாம் யாரு? எங்கே வந்தீர்கள்? ஏன் இங்கு கூட்டங்கூடிக் கத்துகிறீர்கள்?" என்று கேட்டாள். அந்த பிச்சைக்காரர்கள். "தாயே! இந்த வீட்டு எஜமானி யம்மா நீங்கத்தானே......ஏயெங்களுக்கு இன்னிக்கு சோறு போட்டு துணி வாங்கிக் குடுக்கிரமன்னு எங்ளை வரச் சொன்னீங்களே வரலச்சிமீ! கஞ்சி வாக்கணும்" என்ருர்கள்.

கிருஷ்ணகுமாரி அலறியவளாய் "என்ன! என்ன!......நாங்களா எழைகளை வரச்சொன்னேம்? அப்படி ஒன்றுமில்லையே. இது எடம் மாருக வந்திருப்பீர்கள். நாங்கள் பெரிய செல்வவந்தர்கள் இல்லை. இன்னும் யார் சொன்னர்களோ அங்குபோய் விசாரியுங்கள்" என்ருள். பிச்சைக்காரர்கள் "இதென்னம்மா இப்படி சொல்றீங்களே......இந்த வூட்டு அய்யாதானம்மா சாந்தமூர்த்தி. அவரு தானே ஏதோ தேர்தலாமே. அதுலே நிக்கருராமே.........எத்

தினியோ இடத்திலே விசாரிச்சிக்கினு தானே வந்தோம்...... ஏயெங்களை வரச் சொல்லிப்புட்டு இல்லேன்றீங்களே......இது தரு மமா?'' என்று கத்தினார்கள்.

கிருஷ்ணகுமாரிக்கு ஒன்றும் தோன்றவில்லை. இது ஏதோ சூழ்ச்சி என்பது தெட்டன விளங்கிவிட்டது உடனே சாந்தமூர்த் தியைக் கூப்பிட்டு இவ் விஷயத்தைக் கூறினாள்.

இது கேட்ட சாந்தமூர்த்தி திகைத்தான். "கிருஷ்ணு! முன்பு வந்த புரளியை விட இது ஏதாவது வியக்கக்கூடியதா?...அல்லது. வருந்தக் கூடியதா! இதுவும் உன் அருமை அண்ணனுடைய அபார மான மூளையின் வேலையாகத்தான் இருக்கும். இம்மாதிரி "வரச் சொல்லிவிட்டு இல்லை என்று அடித்துத் துரத்தினான் கர்மி, படு பாவி''என்று இந்த ஜனங்கள் நம்மைத் திட்டும்படிச் செய்து அதைக் கொண்டு ஓர் பிரசாரம் செய்யலாமென்ற எண்ணத்துடன் இம்மா திரி செய்திருக்கிறார்கள். இதில் மறைவும் சந்தேகமும் வேறு உண்டா!

உம்...கடவுள் என்னுடைய வாழ்க்கையிலேயே ஓர் சோதனை யைப் புகுத்தி அதை மர்மமாகவே நடத்தி வருகிறார். இதற்கு முடி வும் பரிகாரமும் உண்டோ இல்லையோ, அது அவன் உள்ளத்தின் போக்கு......இந்த சோதனையைப் பார்க்கும்போது எனக்கு கபீர் தாஸின் திவ்ய சரித்திரம் ஞாபகத்திற்கு வருகிறது. இம்மாதிரி ஓர் தர்மத்தைச் செய்தாலும் புண்யமுண்டு....இருக்கட்டும்...என்று வீதிப்பக்கம் வந்தான்.

வீதியிலுள்ள ஜனங்களின் பரிதாபத்தைக் கண்டு சகிக்கவே முடியவில்லை. குடல் முதுகோடு முதுகாக ஒட்டியும், கன்னங்கள் குழி விழுந்தும், கண்கள் பாதாளத்தில் போய் புதைந்தும், எலும்பும் தோலுமாகப் பசியினால் உயிர் துடித்தவாறு வெய்யிலில் உட்கார்ந் திருந்ததைப் பார்த்ததும் சாந்தமூர்த்தியின் கண்ணீர் தானாகவே பெருகிவிட்டது. அவனால் இந்த பரிதாபக் காக்ஷியைக் காணவே முடியாது மனம் கரைந்து விட்டது. இம்மட்டுமாவது தாம் ஓர்

தர்மத்தைச் செய்யும்படியாகத் தூண்டிய எதிரிகளை மனமாற வாழ்த்தினான்.

அப்பிச்சைக்காரர்களை நோக்கி "ஐயா! பகவான் உங்களையனுப்பி உங்கள் மூலம் என்னைச் சந்தோஷப்படும்படிச் செய்திருக்கிறார். நீங்கள் இன்னும் சிறிது நேரம் பொறுமையாக இருங்கள். என் கையில் கிடைத்தவரையில் கஞ்சி வார்க்கிறேன். இது மனிதர்களின் சதியாலோசனையின் சூழ்ச்சியாகச் செய்த காரியமாயினும் கடவுளின் ஆத்மார்த்தகமாக முடியட்டும்.'' என்று அவர்களனைவரையும் தோட்டத்துப் பக்கம் வந்து உட்காரச் சொல்லிவிட்டு கடைக்கு ஓடி சாமான்களை வாங்கிக் கொண்டு ஒரு நல்ல சமையல்காரனையும் அழைத்து வந்தான்.

தடபுடலாக சில மணி நேரத்திற்குள் ஒரு குழம்பும் ஒரு கறியும் சாதமும் செய்து அந்த ஏழைப் பிச்சைக்காரர்களுக் கெல்லாம் தானே அருகிலிருந்து எடுத்து பரிமாறி "போதுமா! போதுமா... இன்னும் சாப்பிடுங்கள். இன்னும் சாப்பிடுங்கள்.'' என்று பரிந்து பரிந்து போட்டு உபசரித்தான்.

ஆஹா......அந்த ஏழைப் பிச்சைக்காரர்களின் சந்தோஷத்திற்கு ஓர் எல்லையே இல்லை. சாந்தமூர்த்தியை வாழ்த்திக் கொண்டே வயிறு புடைக்கத் தின்றார்கள். சாந்தமூர்த்தியின் பெண் குழந்தை ஓர் குவளையில் ஜலத்தை மொண்டு ஒவ்வொருவருக்காய் தாகத்திற்கு வார்த்து வந்த அருமையைக் கண்டு சாந்தமூர்த்தியின் உள்ளம் பூரித்துப் புளகிதமடைந்தது. ஏழைகளின் ஆநந்தமும் கரை புரண்டது. எல்லோரும் சம்பிரமமாகச் சாப்பிட்ட பிறகு வெத்திலை பாக்கும் கொடுத்தான்.

ஆகாரத்தைவிட இதுவே அவர்களின் சந்தோஷத்திற்குச் சிகரம் வைத்தது போலிருந்தது. எல்லோரும் வெத்திலை பாக்கை வாங்கிக் கொண்டு ஆநந்தமாகக் கூத்தாடி வாழ்த்திய படியே சென்று விட்டார்கள். இந்த விஷயமும் ஊர் முற்றும் பரவாமலில்லை. சாந்தமூர்த்தியின் சாந்தமான நடத்தையின் அழகை மெச்சியும், எதிரி

களின் சூழ்ச்சி என்றதை யறிந்தும் சற்றும் முகங்கோணுமல் கையில் இருந்த வைர மோதிரத்தை விற்று ஏழைகளை உபசரித்த பெருமை யான தர்ம குணத்தைப் பாராட்டியும் ஊரில் ஜனங்கள் கொண் டாடத் தலைப்பட்டார்கள்.

"இதற்குமுன் நடந்த பெரும் பாவகரமானதும், அவமானகர மானதும், அபவாதத்திற்கு இடம் உண்டாக்கியதுமான ஊழலை மறைத்துத் தன்னை எல்லோரும் கொண்டாடும்படியான மார்க்கத் தைத் தேடிக்கொள்வதற்காகத் தானே இவ்விதம் பிச்சைக்காரர்களை வரச் செய்து சமாராதனை செய்து அனுப்பினுன். பசுவைக் கொன்று விட்டு செருப்பு தானம் செய்து விட்டால் மறைந்து விடுமா! அப் படித்தான் இதுவும்" என்று எதிரியின் பக்கத்தைச் சார்ந்த சிலர் கூறுமலில்லை. இவைகளை எல்லாம் சாந்தமூர்த்தி காதிலேயே வாங்கு வதில்லை. தன் போக்கில் வேலை செய்து வந்தான்.

ஜீவகாருண்யத்தில் ஈடுபட்டுள்ள சாந்தமூர்த்தி ஒரு எறும் பையும் இம்சிக்கமாட்டான். தேள் வந்தால் கூட அதை கொடுக்கை மாத்திரம் அறுத்து சாகாமல் ஓட விட்டு விடுவான். இத்தகைய உத் தம குணவானுகிய சாந்தமூர்த்தி தன் மனத்தினுலும் எதிரிகளுக்குத் தீங்கு நினைக்கவில்லை. தன்னுடைய பித்ரு வாக்கைப் பரிபாலனம் செய்விக்க வேண்டுமானுல் கடவுள் ஜெயத்தைக் கொடுக்கட்டும், இல்லையேல் அவன் செயல்போலாகட்டும்." என்ற முடிவுடன் கட வுளை த்யானித்து வருவானே யன்றி மற்ற எதுவும் செய்தறிய மாட்டான்.

ஒரு தினம் காலை 10 மணிக்கு ஒரு தந்தி வந்தது. அத் தந்தி யைப் பார்த்த உடனே சாந்தமூர்த்திக்கு தூக்கி வாரிப் போட்டது. அதாவது "உன்னுடைய க்ராமத்து வீடு பற்றி எரிந்து விட்டது. உடனே வரவும்" என்று தந்தியில் கண்டிருந்தது......கிராமத்து வீட்டில், சென்ற மாதந்தான் அறுவடை செய்த தானியங்கள் வீட்டின் பெரும் பாகத்தில் களஞ்சியங் கட்டி வைத்திருந்தன. அது முற்றும் படு நாசமாய்ப் போயிருக்குமே...என்ன அனியாயம்!

இதுவும் தேர்தலின் அத்யாயங்களில் ஒன்றுயிருக்குமோ அன்றி உண்மையாக விருக்குமோ தெரிய வில்லையே! என்ன செய்வது என்று தவித்தவாறு உடனே தபாலாபீஸுக்கு ஓடி அவ்வூர் முனிசிப்புக்கு இது உண்மை தானு என்றறிய ஒரு தந்தி கொடுத்து பதிலுக்கும் கட்டி இருந்தான். சில மணி நேரத்திற்குள் இது முற்றிலும் உண்மை என்ற தகவல் கிடைத்து விட்டதும் சாந்தமூர்த்தியின் மனம் இடிந்து விட்டது.

அறுவடை செய்து கொட்டி இருக்கும் நெல்லை விற்றுத்தான் கிஸ்தி கட்டவேண்டும். நிலங்களுக்கு சாகுபடி செய்ய எரு முதலியன வாங்க வேண்டும். ஏர் உழ உயர்ந்த ஜாதி மாடுகள் வாங்க வேண்டும். வருடாந்திர சாப்பாட்டிற்கு வைத்துக் கொள்வதற்கே மிகுதி நெல்லும் போதாது என்றெல்லாம் நினைத்திருக்கையில் வீடே எரிந்து தானியம் முற்றும் கரியாகி விட்ட தென்றதைக் கேட்டதும் அவன் இதயம் தவித்தது. கிருஷ்ணகுமாரியைத் தான் மணம் செய்து கொண்டதன் பலன் இன்னும் எத்தனை தூரத்தில் கொண்டுவிடப் போகிறதோ தெரியவில்லையே...... என்ற ஒரு சிறிய வெறுப்பு கலந்த உணர்ச்சி அவன் மனத்தில் எழுந்தது. ஆனுல் அதையும் அவன் கிருஷ்ணுவிடம் வெளியிடவில்லை.

அன்றே கிளம்பி ஊருக்குச் செல்ல நினைத்தான். ஆனுல் "நான் ஊரிலில்லாத சமயம் இந்த வீட்டிற்கும் நெருப்பு வைத்தோ, வேறு விதமாக இம்சித்தோ, என் குழந்தைகளுக்கு ஏதாவது தீங்கு செய்தோ விபத்தை உண்டாக்கி விட்டால் என்ன செய்வது? என்னுடைய ஜீவியத்தில் பலவிதமான மர்மங்கள் இருந்தபோதிலும் வெளிப் படையான ஆநந்தத்திற்குக் காரணம் என்னுருயிர் குழந்தைகளின் முகங்களல்லவா! அதுவும் போய்விட்ட பின்னர் எனக்கு உலகில்என்ன இருக்கிறது?

ஆகா! இதுவும் ஒரு சோதனை காலமா!" என்று விசனித்த படியே குழந்தைகளையும் கிருஷ்ணகுமாரியையும் கூட அழைத்துச்

செல்ல தீர்மானித்தான். அவனுடைய முக்கிய நண்பர்கள் தாம் வீட்டையும் குழந்தைகளையும் பார்த்துக் கொள்வதாயும், அவனை ஊரைப் பார்த்துவிட்டு வா வென்றும் தேறுதல்கள் கூறினார்கள். இது விஷயமாக கிருஷ்ண குமாரியிடம் கலந்து பேசவே இல்லை. ஊருக்குச் சென்று விட்டான்.

அந்தோ! பரிதாபம்...பரிதாபம்! வீடு எரிந்து சாம்பலாகி தானியம் முற்றும் கரிக்குவியல் குவிந்து அலங்கோலமாகக் கிடப்பதைப் பார்த்ததும் அவன் வயிறு பற்றி எரிந்தது. அவனால் தாங்கமுடியாத பெரும் துயரம் அவனைக் கப்பிக் கொண்டு குலுங்கக் குலுங்கக் கதறச் செய்துவிட்டது. அந்த வீட்டு முற்றத்திலேயே கட்டி இருந்த மாடுகள் நெருப்பினால் காய மடைந்து கொத்துயிரும் குலை உயிருமாகத் தத்தளிப்பதைப் பார்த்ததும் அவனுடைய இருதயமே வெடித்துவிடும் போலாகி விட்டது. தயாளமும் காருண்யமும் நிறைந்த மனத்தை உடைய அவன் இக்கண்ராவிகளைப் பார்த்து எங்ஙனம் சகிக்கக் கூடும்? சில நிமிட நேரங்கள் மயக்கம் போட்டு விழுந்து விட்டான்.

மற்றவர்கள் அவனைத் தேற்றினார்கள். மணியக்காரரை விசாரித்ததில் "இது எப்படிதான் தீக்கிரையாகியதோ வென்று ஒருவராலும் கண்டுபிடிக்கவே முடியவில்லை, இரவு சுமார் பத்துமணி வரையில் எல்லோரும் விழித்திருந்தோம். அன்று தான் பக்கத்து மைதானத்தில் சந்தையாகையினால் அந்த சந்தையைப் பற்றிய பேச்சினால் ஜனங்கள் தூங்க நேரமாகிவிட்டது.

நடுநிசி சமயத்தில் திடீரென்று புகை கிளம்பும் நாற்றத்தைக் கண்டு சிலர் எழுந்தார்கள். உடனே எல்லோரும் எழுந்தோம். ப்ரம்மாண்டமாகப் பற்றி எரிகிறதைப் பார்த்து சில நிமிடங்கள் செய்வதறியாது கல்லாய்ச் சமைந்து விட்டோம். பிறகு ஊரே உருண்டு திரண்டு ஆனவரையில் தீயைப் பரவ விடாது அணைக்கப் பார்த்தும் அது பயன் தராது பக்கத்து வீட்டிலும் பிடித்துக் கொண்டது. அதிலிருந்த கிழவரும் அத்திக்கு இரையாகி விட்டார் கொட்டிய தண்ணீயும் மண்ணும் கணக்கிலடங்காது. எல்லாம்

வீணுகி விட்டது. வீடு முற்றும் எரிந்த பிறகே தணிந்தது'' என்ருர்.

இந்த அதி பயங்கரமான விஷயத்தைக் கேட்டதும் சாந்த மூர்த்தியின் வேதனை முன்னிலும் பன் மடங்கு அதிகரித்தது கிழவரும் தன் வீட்டின் மூலம் சாம்பலாகியதைக் கேட்டதும் அவனுல் சகிக்கவே முடியவில்லை. தன்னுல் தான் அக்கிழவர் இறந்தாரென்றும்......தானே தான் கொலை செய்து விட்டது போன்றும் உணர்ச்சி உண்டாகி விட்டது. தடதடவென்று ஓடிப்போய் கிழவரின் சவத்தருகில் உட்கார்ந்தான். அவன் மனோவேதனை யதிகரித்து விட்டதால் ''சீச்சீ! இதென்ன வாழ்க்கை...இதென்ன ஜீவியம்...என்மேலுள்ள க்ஷாத்திரத்திஞல் இதையும் யாரோ செய்திருக்கிருர்களேயன்றி இது தானுக நேர்ந்த சம்பவமே யல்ல. இங்கு நமக்குப் பகைவர்களே கிடையாது. எதிரிகளின் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்றுதான்...இப்படியும் அக்ரமங்களை...கூறத்திறமற்ற அனியாயத்தைச் செய்து தாம் வாழ நினைப்பதுவும் ஓர் நினைவா! ஏன் நான் இதில் இனி தலையிட வேண்டும்...இப்போதே இத்தனை அக்ரமங்கள் நடைபெறும்போது இன்னும் நாள் நெருங்க நெருங்க எத்தனை ஆபத்துக்கள் நேருமோ யார் யாருக்கு என்னென்ன தீங்குகள் நேருமோ......ஹா......கடவுளே......நான் விலகிக் கொள்கிறேன். என்னுல் பிறருக்கு ஒரு விதத்திலும் தீங்கு வேண்டாம். எல்லாம் என் தலையுடன் முடியட்டும்.'' என்று பலவிதமாக எண்ணமிட்டு உடைந்து போன இருதயத்துடன் சோர்ந்து விட்டான்.

———

## 9-வது அதிகாரம்

### சண்டாளச் செய்கையின் சங்கட விளைவுகள்

தன் கணவன் மிகுந்த மனக்கலக்கத்துடன் சென்றதும், கிருஷ்ணகுமாரிக்கும் வேதனை அதிகரித்து விட்டது. தன் உடன் பிறந்த அண்ணனே இத்தகைய பாதகங்களைச் செய்வது அவளுக்கு அபாரமான துக்கத்தையும் மனவேதனையையும் கொடுத்தது. "இவ்வித, மனஸ்தாபங்களும் உலகில் மக்களிடம் உண்டாகுமா! இத்தனை கொடிய இதயமும் எண்ணமும் கூட கடவுள் படைப்பில் இருக்கிறதா! இன்று இம்மாதிரி செய்தவர்கள் நாளை இவ் வீட்டையும் நெருப்பு வைத்துக் கூண்டோடு கைலாசமாக ஒழித்து விடவும் அஞ்சமாட்டான் அல்லவா!

ஐயோ! கொடிய வேளையின் கூற்றே! இத்தனைக்கும் காரணம் நானல்லவா! என்னுடைய மூடத்தனமான செய்கையின் நிழலல்லவா? நான் துணிந்து செய்த காரியத்தில் நான் எதிர்பார்த்தபடி ஒரு அணுவளவும் சாந்தியும் சந்தோஷமும் இல்லாது ஆரம்பம் முதல் பாரத யுத்தம் போலவே ஆய்விட்டதே.. இதுதான் நான் கண்ட பலனுகும். என்னுல் அவரும் தீராத துயரத்திற்கும் அபாண்டத்திற்கும் ஆளாகி விட்டார் ... சீச்சி ... என்ன மனித வாழ்க்கையின் மர்மம்? இப்படியும் ஒரு செய்கை இருக்குமா!

எது எப்படியாவது இருக்கட்டும். நல்லதாக முடிந்தாலும் சரி. தீயதாக முடிந்தாலும் சரி. என் புருஷன் வருவதற்கு முன்பு நான் என் அண்ணனைக் கண்டு அவனிடம் என் ஆத்திரம் தீரக் கேட்டுவிட்டு வந்துவிடுவோமா?'' என்றும் துணிந்தாள். அடுத்த நிமிடமே, சென்றுல் என்னவாகுமோ, எப்படியாகுமோவென்று மனத்தில்

திகிலும் பாதித்ததால் சற்று யோசித்தாள். தீர்மானமான முடிவுக்கு வந்துவிட்டாள்.

குலசேகரன் சில காலமாக தனி வீடு ஒன்று வைத்துக்கொண்டு வக்கீல் ப்ராக்ட்டீஸ் செய்துவருகிறான். ஏனெனில் வீட்டில் திருவேங்கடத்தின் புத்தி மாறாட்டத்தினால் அடிக்கடி கூச்சலும் குழப்பமும் உண்டாவதால் அது தன் தொழிலுக்குத் தடையாயும் அவமானமாயும் இருக்குமென்ற தீர்மானத்தினால் அவ்வாறு தனி வாஸம் செய்யலானான்.

பகல் மூன்று மணி இருக்கும். கிருஷ்ணகுமாரி ஒருவருக்கும் தெரியாமல் புறக்கடைப் பக்கமாக ஓர் வண்டியமர்த்திக்கொண்டு மிகுந்த துணிச்சலுடன் குலசேகரனின் தனி விடுதிக்குச் சென்றாள். வீட்டு வாசலில் ஒரு பெரிய வேட்டை நாய் கட்டப்பட்டிருந்தது. இவளைக் கண்டவுடன் ப்ரமாதமாகக் குரைக்கவாரம்பித்தது.

அதைப் பார்த்ததும் கிருஷ்ணகுமாரிக்கு பயமெடுத்துக் கொண்டது. அப்போது உள்ளே இருந்து தேனோ பாகோ, யாழோ குழலோவென்று ஐயுறும்படி மிருதுவான பெண்மணியின் குரலில் "டாலி!...மை டாலி! யார் வந்திருப்பது? ஏன் கத்துகிறாய்? சும்மா இரு" என்று வந்ததை கேட்டதும் கிருஷ்ணகுமாரி திடுக்கிட்டாள். இங்கு பெண்களின் குரல் ஏது....ஒருகால் வஸந்தகுமாரியாக இருக்குமோ ... இல்லை ... வஸந்தாவின் குரல்கூடவா மறந்துவிட்டது.

நாம் வீடு தப்பி வந்துவிட்டோமா என்று எண்ணி மீண்டும் குலசேகரனின் போர்டை (எழுத்துக்கள் உள்ள பலகையை) பார்த்தாள். அதில் குலசேகரனின் பெயரே இருந்ததால் சந்தேகமற பின்னும் இரண்டடி எடுத்து வைத்தாள். நாயின் குலைப்பு அக்குரலைக் கேட்டதும் சற்று அடங்கியது. அதே சமயம் உள் வாசல் கதவருகில் ஒரு பெண்மணி கந்தர்வ மாதைப் போன்று எட்டிப் பார்த்தாள்.

கிருஷ்ணகுமாரிக்கு இவள் யார் என்பதே தெரியாது. ஆகையினால் "குலசேகரன் இருக்கிறாரா!" என்று கேட்டாள். இக் குர

லேக் கேட்டதும் யாரது என்று கூறிக்கொண்டே குலசேகரன் வந்து எட்டிப் பார்த்தான். அவ்வளவுதான் எரிமலையே எதிரில் நின்று இவனை எரிப்பதுபோல் தோன்றிவிட்டது. கண்கள் சிவக்க பல்லைக் கடித்துக்கொண்டு "குடியைக் கெடுத்த கோடரிக்காம்பே...அல்பக் கழுதையே...உன்னை யார் இங்கு வரச்சொல்லியது? போ வெளியே ...உனக்கு இந்த படியில் அடி வைப்பதற்கு மூஞ்சி உண்டா! யோக்யதை இருக்கிறதா! வெட்கமில்லாது என் பெயரைக் கூறிக் கொண்டு வந்துவிட்டாயே ... தூத்தூ" ... என்று சரமாரியாய்ப் பொழிந்துவிட்டான்.

இம் மாதிரி பரிசுகள் கிடைக்குமென்று எதிர்பார்த்தே கிருஷ்ணகுமாரி வந்தபடியால் அவளுக்கு ப்ரத்யேகமாக ஒன்றும் உண்டாகவில்லை. பெத்த தாயின் சவத்தைக் காட்டாமல் தூற்றி யடித்து அனுப்பிய மனிதன் இது சொல்வது ஓர் வியப்பா! ஆதலால் அவளும் சற்றும் பயப்படாமல் அகங்காரத்துடன் பல்லைக் கடித் துக்கொண்டே பேசத்தொடங்கி "போதும்...அதிகமாக பேசாதே. உலகத்தில் க்ஷாத்திரம் கொண்ட எத்தனையோ குடும்பங்கள் இருக் கின்றன. புராணத்தில் பாண்டவ கவுரவர்களுக்கும் சண்டையும் தீராப் பகையும் இருந்தது. ஆனால் அந்த துர்யோதனனையும், கம்ஸனையும்கூட நீ நல்லவர்களாகச் செய்துவிட்டாய்...

இம் மாதிரியும் ஒரு அக்ரமத்தைச் செய்ய உன் கொடிய நெஞ்சம் எப்படித்தான் துணிந்தது? என் புருஷன்மீது அடாத பழியைப் போட்டாய்...பிச்சைக்காரர்களை ஏவி பரீக்ஷித்தாய். அது போதாதென்று வீட்டையும் கொளுத்தத் துணிந்த நீ இனி கொலை செய்வதற்கும் அஞ்சுவாயா! அட பாவீ...உன் மனத்தில் ஈரமில் லையா...உலர்ந்த கட்டையாகிவிட்டதா!

என்று முடிப்பதற்குள் "சீச்சீ...துஷ்டே...இத்தனை தைரி யத்துடன் சண்டைபிடிக்கவா வந்தாய்? என்ன சொன்னாய்...நானா உன் புருஷனுக்கு அவமானமுண்டாக்கி வீட்டைத் தீக்கிரையாக்கி னேன்! ஜாக்ரதை...நாக்கை உள்ளே வைத்துப் பேசு. அதிகமாக மிஞ்சாதே. நான் உன் புருஷனைப்போல் சோம்பேறியாய் சோதாக்க

ளுடன் அலைந்து திரியும் குடிகாரனல்ல, பரநாரீ சோரனல்ல. அஞ்சாத நெஞ்சுடைய கிராதகனல்ல.

நான் ஓர் சட்ட நிபுணன் என்பது ஞாபகமிருக்கட்டும், இம் மாதிரி என் பேரில் பழி சாட்டுவதாயின் நான் உடனே மான நஷ்ட வழக்குத் தொடுத்து, உன்னழகான புருஷனை தண்டித்துவிடும் சாமர்த்தியமும், சக்தியும் என்னிடம் இல்லாமலில்லை ஜாக்ரதை. மானங்கெட்ட மடையனை மணந்து மதியற்ற வாழ்க்கை நடத்தும் நீ இன்னும் சிபார்சு செய்வதற்கும் வந்துவிட்டாயா? நீ சிபார்சுக்கு வந்ததன் பலன் சீக்கிரமே சிறைவாஸமாக மாறிக் கிடைத்துவிடும். ஓடிப்போ கழுதை!'' என்று சற்றும் தயை தாக்ஷிண்யமின்றி கூறி விட்டு கதவை தடாரென்று சாத்திக்கொண்டு உள்ளே போய் "டாலி!...அந்த திருடியை வெளியே தள்ளு'' என்று ஆக்ஞாபித்த நிமிடமே, அறிவிற் சிறந்த நாயும் ப்ரம்மாண்ட தொனியுடன் குரைத்துக்கொண்டே இவளைச் சுற்றிச் சுற்றி வந்து மேலே விழுந்தது.

இனி என்ன செய்ய முடியும்? இந்த நாயின் குரைப்பைக் கேட்டு வீதியில் செல்வோர் வருவோர் வேறு கூட்டங் கூடிவிட்டார்கள். அதுவும் அவமானமாகிவிட்டது. மனத்தில் ஏற்கனவே உள்ள துக்கமும் ஆத்திரமும் பொங்குகிறது. அதே சமயம் நாய் ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து காலில் நன்ருகக் கடித்துவிட்டது. தாங்கமாட்டாத வேதனையுடன் கடியின் உபத்திரவமும் அவமானமும் சேர்ந்ததும் இனி இங்கு நிற்கலாகாதென்று மனம் முறிந்து போய் வீட்டிற்கு வந்துவிட்டாள்.

நாய்க் கடி மிகவும் கெட்டது என்று கூறக் கேட்டிருப்பதால் இப்போது அபாரமான பயமும், திகிலும் பிடித்துக்கொண்டு வதைக்க வாரம்பித்தது. நாய் எப்படி கடித்ததென்று கூறுவது... வயித்தியரிடம் என்ன சொல்வது என்ற குழப்பமுண்டாகிவிட்டது. வீட்டிலிருந்த வேலைக்காரக் கிழவியை யழைத்து "பாட்டீ! தோட்டத்தில் ஏதோ ஒரு நாய் வந்திருந்தது. அதை நான் கவனிக்கவே இல்லை. நான் நடந்து செல்கையில் அதன் வாலை மிதித்து விட்டேன். அது உடனே என் காலைக் கடித்துவிட்டது. என்ன

செய்வேன்? ரத்தம் வழிகிறது. உடனே சென்று டாக்டரை அழைத்து வா'' என்று தளுக்காகக் கூறிவிட்டாள்.

கிழவி ஓடோடியும் வைத்தியரை அழைத்து வந்தாள். வைத்தியர் "இதை மிகவும் ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் மிக்க ஆபத்தாய் முடியும். உடனே நிரம்பவும் குளிர்தேசத்திற்குச் செல்வது உசிதம். தக்க மருந்துகளும் கொடுத்து ஊசி ஏத்தி இருக்கிறேன்; பார்க்கலாம்...என்று கூறிச்சென்றார்.

ஏதோ ப்ரமாதமாகச் சாதித்துவிடலாமென்று சென்றதற்குப் பலன் நாயினும் கொடிய நிலைமையில் இருந்து, நாயை ஏவி கடிக்கச் செய்த வயிற்றெரிச்சல் அவளால் சகிக்கவே முடியவில்லை. இனி செத்தாலும் இப் பாதகனின் முகத்தில் விழிப்பதில்லை என்ற ப்ரதிக்ஞை செய்துகொண்டாள். இம் மாதிரி நடந்ததென்பதைத் தன் கணவனிடம் கூறவும் அஞ்சினாள். நாயின் கடி உபத்திரவம் தாங்கமாட்டாது "ஹா! ஊ''...என்று அலற்றிக்கொண்டே கிடந்தாள்.

ஊருக்குச் சென்ற சாந்தமூர்த்தியின் நிலைமை மிகவும் கேவலமாகிவிட்டது. "எனக்கு இந்த சனியன்களே ஏதும் வேண்டியதில்லை. அதனால் பிறருக்கு ஹிம்சையும் வேண்டாம். நான் இதை விட்டு விட்டதாக நோட்டீஸ் போட்டுவிடுகிறேன்'' என்று எண்ணி அதை அவ்வூர் முனிசீப்புடன் கூறினான். இதைக் கேட்ட முனிசீப்பு' "மூர்த்தீ...இம் மாதிரி செய்வது அழகேயல்ல. அவர்களுக்குப் பயந்து கொண்டு நீ புறங்காட்டி ஓடியதாக ஊரே நகைத்துப் பரிகஸிக்கும். உன் தந்தை இதுகாறும் பெற்றிருந்த அதிகாரங்கள் முற்றும் இந்த ஒரு செய்கையில் மறைந்துபோய்விடுவதோடு அவர் சாகும்போது கூறிய வார்த்தைகளை நீ தட்டிவிட்டதாயும் ஆய்விடும்

மூர்த்தீ! ஒரு மனிதன் உயிரோடு இருக்கையில் அவன் இச்சைகளைப் பூர்த்தி செய்வது ஓர் உயர்ந்ததல்ல. அம்மாதிரி செய்வது சில சமயங்களில் அவர்களின் முகஸ்துதியிலும் சேர்ந்ததாகிவிடும். செய்யாவிட்டால் கேட்கப்போகிறார்களே...திட்டுவார்களே என்ற உணர்ச்சி கூடவே பாதிக்கும். அதனால் செய்தே தீரவேண்டி இருக்கும். ஒரு மனிதனின் அந்திய காலத்தின் இச்சையை அதன் பின்ன

பூர்த்தி செய்வித்தால்தான் உத்தமமான செய்கையாகும். அந்த ஆத்மா சாந்தியடையும். உன்னையும் ஆசீர்வதிக்கும். நீ இப்படி தளர்வது அழகல்ல.

மூர்த்தி!...கீதையை நீ தலைகீழாகப் பாடமாகப் படித்திருப்பதாக உன் பிதா அடிக்கடி கூறக் கேட்டிருக்கிறேனே...அதைப் படித்துமா உனக்கு இத்தகைய குழப்பமும் மாறுபாட்டமும் இருக்கிறது. நீ ஆரம்பித்த காரியத்தை விடாது செய்து முடிப்பதுதான் உன்னுடைய கடமை. நீ ஏதோ ஜீவகாருண்யத்தினால் விலகுவதாக உலகம் நினைக்காது. பயந்தாங்கொள்ளியாக விலகிக்கொண்டான் என்றுதான் உலகம் உன்னை தலைமுறை தலைமுறையாக நிந்திக்கும். இதற்கு இடங் கொடாதே. பகவானிருக்கிறான்.

இனி நீ தியங்காமல் ஊருக்குப் போய்விடு. அங்கு குழந்தைகளையும் அவளையும் தனியே விட்டுவந்திருக்கிறாய். அவர்களுக்கு ஏதாவது விபத்து நேருமாயின் மிகவும் கஷ்டமாகிவிடும். ஆகையால் இனி இங்கு இருந்து உபயோகமில்லை. மேலே யாகவேண்டியதைப் பாரு. உன் பிதாவுக்கு இவ்வூர் கோடியில் ஒரு பெரிய தோப்பும் மத்தியில் ஒரு சிறிய குடிசைக் கட்டிடமும் இருக்கிறதல்லவா! அதில் இனி உன் தானியங்களைப் போட்டு வைத்துக்கொண்டு இவைகளை சீர்படுத்திக்கொள்ளலாம். நீ தைரியமாக ஊருக்குப் போய் வா...என்று பலவிதமாக தைரியங்கூறித் தேற்றினர்.

சாந்தமூர்த்தியின் மனம் சற்று தெளிந்தது. கிழவரின் சவத்தைத் தானும் உடனிருந்து அடக்கம் செய்தான். வீடு எரிந்து குவிந்துள்ள கண்ராவியைப் பார்த்துக் கண்ணீர் பெருக்கினன். அன்றிரவே புறப்பட்டுவிட்டான். மனம் மட்டும் அலைகாற்றில் அலைந்திடும் துரும்புபோல் தத்தளிக்கின்றது. இன்னிலைமையில் விடியற்காலம் மூன்று மணிக்கு வண்டி நகரத்திற்கு வந்ததும் வழக்கம்போல் ஜட்கா வண்டி வைத்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான்.

கிருஷ்ணகுமாரி "இன்னும் என் புருஷன் வரவில்லையே...இன்னும் வரவில்லையே! என் தேகஸ்திதி கேவலமாகிக்கொண்டு வருகிறதே! என் செய்வேன்?" என்று புலம்ப வாரம்பித்தாள். இரவு முற்றும் தூக்கமே இல்லை. புரண்டுகொண்டே இருந்தாள். "விடியற்காலம் வரும் வண்டியில் கண்டிப்பாய் வந்துவிடுவதாகச் சொன்னான். நீங்கள் கவலைப்படவேண்டாம்! தைரியமாயிருங்கள்" என்று சாந்தமூர்த்தியின் நேயர்கள் தேற்றினர்கள்.

விடியற்காலை 5 மணிக்கு ஓர் வழிப்போக்கன் விரைக்க விரைக்க ஓடி வந்து "ஐயா! அனியாயம் ... அக்ரமம்......இதோ ஒரு மைல் தூரத்திலிருக்கும் தென்னந்தோப்புக்கு சமீபத்தில் ஒரு ஜட்கா வண்டியில் ஒருவர் வந்தாராம். யாரோ முரடர்கள் திருடர்கள் அவரை வண்டியுடன் மடக்கி வண்டிக்காரனை மரத்தோடு மரமாகக் கட்டிப் போட்டு விட்டு வண்டியில் வந்த ஐயாவை நன்றாக எலும்பு நுறுங்கும்படி அடித்துவிட்டு அவர் கையிலிருந்த பொருளையும் அபகரித்துக் கொண்டு ஓடி விட்டார்களாம்.

காலையில் காய்கறிகளும், கீரைகளும்; தயிர், பால் முதலியவைகளையும் கடைக்கு விற்பதற்குக் கொண்டு செல்வோர் அங்கு அலங்கோலமாக ஒருவர் விழுந்து கிடப்பதையும் மரத்தோடு மரமாக வண்டிக்காரனைக் கட்டி இருப்பதையும் கண்டு கூட்டங்கூடி விட்டார்கள். வண்டிக்காரனை சற்று தேற்றிக் கேட்டபோது அவர் இந்த தெருவு....இந்த வீட்டுக்குப் போகவேண்டுமென்று சொல்லியதாகச் சொன்னான்.

182999

ஐயா! எம்மனசு கேக்கலே! நான் ஒரு காய்கறி கூடையைத் தூக்கிக் கொண்டுதான் சென்றேன். அதை ஒருவரிடம் ஒப்புவித்து விட்டு ஓடிவந்தேன். சீக்கிரம் வாருங்க. அந்த ஐயாவுக்கு ஸ்மரணையே இல்லை. பிணம்போல் கிடக்கிறாரு. சீக்கிரம் வண்டி ஒன்னு கொண்டு வாங்க." என்று மிகுந்த பரபரப்புடன் கூறினான்.

இதைக் கேட்ட உடனே அவர்களின் மனம் பதைத்த பதைப்பைக் கூற வேண்டுமா! "ஐயோ! இப்படி எங்கே நேர்ந்து விடுமோவென்று பயப்பட்டதற்குத் தகுந்தாப் போல் நடந்து விட்டதே. கிருஷ்ணகுமாரியிடம் இதை எப்படி தெரிவிப்பது? ஹா! சோதனையே!—இப்படி எல்லாம் கொலை கூடவா அத்தோர்தலின் மகத்துவத்தில் செய்யத் துணியும்?" என்று கதிகலங்கிய படியே ஒரு வாடகை மோட்டார் அமர்த்திக்கொண்டு ஓட்டமாகச் சென்றார்கள்.

சாந்தமூர்த்திக்கு ப்ரக்ஞையே இல்லை. அடியின் வேகத்தில் தேகம் முற்றும் தழும்பு தழும்பாக வீங்கிக் கிடக்கிறது. சில இடங்களில் ரத்தமும் பெருகுகின்றது. வண்டிக்காரனுக்கும் நல்ல அடி. சாந்தமூர்த்தியின் நண்பன் இவ்விருவரையும் கண்டு மனம் நடுங்கிப் பதறிப்போய் "சாந்தமூர்த்தி! சாந்தமூர்த்தி!......என்று கதறியபடியே சாந்தமூர்த்தியைத் தூக்கித்தன் மடியில் சாத்திக் கொண்டு கண்ணீர் பெருக இதயம் துடிக்கச் செய்வதறியாமல் திகைத்து விட்டான்.

---

PRINTED AT TATA PRESS & PUBLISHED BY
V. M. PARTHASARATHY, MADRAS.

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்


எழுதிய நாவல்கள்.

| ரூ. 29/8 க்கு 36 நாவல்கள். | முழு விலை | | "ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை. | |
|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ரூ. | அ. |
| வைதேகி | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசனை | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| இன்பஜோதி | 1 | 4 | 1 | 0 |
| ராஜமோஹன் | 1 | 4 | 1 | 0 |
| அனாதைப் பெண் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| ப்ரேமப்ரபா | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அமருககாரா | 0 | 4 | | |
| அன்பின் சிகரம் | 0 | 4 | | |

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் முழு விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தோப்புத்தெரு, திருவல்லிக்கேணி.

Jaganmohini Vol. XIV—No 2 Regd. No. M. 2210





வலிகள்

சுளுக்குகள்

# Strains

அனுவசியமாக வலியினுல் அவஸ்தைப்படாதீர்கள். சம்பந்தப்பட்ட இடத்தில் அம்ருதாஞ்சனத்தை தேய்த்து, அதன் உஷ்ணம் நரம்புக்குள் நுழைந்து, வலியைச் சமனப்படுத்துவதைக் கவனியுங்கள்.




சீக்கிரத்தில் அநுகூலம் உண்டாக்குவதில் அம்ருதாஞ்சனத்திற்கு இணையானது வேறெதுவும் இல்லை.

## அம்ருதாஞ்சன்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும் சொஸ்தப்படுத்தும்.